வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 02.02.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 33 பக்கங்கள் : 12

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## சுகாதார தொழில்சங்கங்களின்

# பணிப்புறக்கணிப்பு இன்றும் தொடரும்

கொழும்பு, பெப்ரவரி 02

**நாடு முழுவதும் சுகாதார தொழில்சங்கங்கள் நேற்று முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் இன்று வெள்ளிக்கிழமையும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

72 சுகாதார தொழில் சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று காலை 6.30 மணி முதல் பணிப்புறக் கணிப்பை ஆரம்பித்தன. போக்குவரத்து உள்ளிட்ட கொடுப்பனவாக மருத்து வர்களுக்கு வழங்கப் படும் 35 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை தமக்கும் வழங்க வேண்டும் வலியு றுத்தியே இந்தப் பணிப் புறக்கணிப்பு போராட் டம் நடைபெறுகிறது.

சுகாதார தொழில்சங் கங்களின் போராட்டத் தால் மருத்துவர்கள் தவிர வேறு எவரும் ஊழியர் கள் எவரும் நேற்று பணி களில் ஈடுபடவில்லை.



இதனால், நோயாளர்கள் பெரும் அசௌகரியங்க ளுக்கு உள்ளாகினர்.

அரசாங்கம் தமது கோரிக்கைக்கு இணங் காத நிலையில் இன்று வெள்ளிக்கிழமையும் போராட்டம் தொடரும் என்று சுகாதார தொழில் சங்கங்களின் கூட்டமைப் பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித் துள்ளார்.

இதேநேரம் - நேற்று 22 மருத்து வமனைகளில் 11

# நிகழ்நிலை காப்பு சட்டம் நேற்று முதல் நடைமுறை!

## குற்றம் நிரூபணமானால் 5 வருட சிறை தண்டனை!

கொழும்பு, பெப். 02

பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் சமூக வலை தளங்கள், இணைய ஊட கங்களை கட்டுப்படுத்தும் நோக் கில் கடந்த மாதம் 24ஆம் திகதி பாராளுமன் றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ் நிலை காப்பு சட்டம் நேற்று முதல் நடை முறைக்கு வந்தது.

இந்த சட்டமூலத்தில் குறிப்பிடப் பட்டுள்ள விதிகள் திட்டமிட்டு மீறப் படுமிடத்தில் - குற்றம் நிரூபணமாகும் பட்சத்தில் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட முடியும்.

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த் தன நேற்று சான்றுரைப்படுத்தினார். இதன் மூலமே இந்த சட்டம் நடை முறைக்கு வந்தது.

இதேநேரம், நிகழ்நிலை பாது காப்பு சட்டத்தின் அடிப்படையில் 11

## ஜனாதிபதி வீட்டுக்கு தீ வைத்தவர் கைது!

கொழும்பு,பெப். 02

கடந்தகால போராட்டத்தின் போது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு தீ வைத்தார் என்று கூறப் படும் சந்தேக 11

## மாணவருக்கு மதிய உணவு மார்ச் முதல் வழங்கப்படும்

### கல்வி அமைச்சர் சுசில்

கொழும்பு, பெப். 02

எதிர்வரும் மார்ச் மாதம் முதல் ஆரம்பப் பாடசாலை - தரம் 1-5 வரையான மாணவர்களுக்கு இலவச மதிய நேர உணவு வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் மூலம் 16 இலட்சம் மாணவர்க ளுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படும். இதற்காக அரசாங்கம் ஆயிரத்து 600 கோடி ரூபாயை ஒதுக்கியுள் ளது.

மதிய உணவுக்காக தினசரி ஒரு மாணவருக்கு 110 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 11

## தமிழ் அரசின் மத்திய குழு 11 அல்லது 12இல் கூடுகிறது

யாழ்ப்பாணம், பெப். 02

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய செயல் குழு கூட்டத்தை எதிர்வரும் 11 அல்லது 12ஆம் திகதி வவுனி யாவில் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கட்சி வட்டாரங்கள் மூலம் அறிய வருகின்றது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகத்தை தெரிவு செய் வது தொடர்பிலும் சிந்திக்கப்படுகிறது என்றும் கூறப் படுகின்றது.

கடந்த மாதம் திருகோணமலையில் தமிழ் அரசு கட்சியின் மத்திய செயல்குழு, பொதுக் குழுக்கள் கூடின. இதன்போது, பொது செயலராக 11

## 41 வகை புற்றுநோய் நாட்டில் கண்டறிவு!

கொழும்பு, பெப். 02

நாட்டில் 41 வகையான புற்றுநோய்கள் இனங் காணப்பட்டுள்ளன என்று தேசிய புற்றுநோய் கட் டுப்பாட்டு விழிப்புணர்வு பிரிவின் மருத்துவர் ஹச ரேலி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

புற்றுநோய் என்பது ஒரு காரணியால் ஏற்படும் நோயல்ல. பல காரணங்களால் ஏற்படும் நோய். ஆனால், அது குறித்த ஆராய்ச்சியின் மூலம் கண்ட றியப்பட்ட 127 புற்றுநோய்களை உலக சுகாதார அமைப்பின் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில், 41 வகையான புற்று நோய்கள் நாட்டில் கண்டறியப்பட்டுள்ளன.

பெப்ரவரி 4ஆம் திகதி உலக புற்றுநோய் தின மாகும். இதை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டு பணியகம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்ட விடயம் வெளிப்படுத்தப்பட்டது. (ஐ)

## யாழ்ப்பாணம், மன்னாரில் 3 புதிய ஈரநில வலயங்கள்!

### அமைச்சர் பவித்ரா அறிவிப்பு

கொழும்பு, பெப். 02

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்கள் உட்பட மூன்று புதிய ஈரநிலங்களை பிரகடனப்படுத்த திட்ட மிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன, வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சுண்டிக் குளம் தேசிய பூங்கா, மன்னார் மாவட்டத்தின் விடத்தல் தீவு பகுதியிலுள்ள இயற்கை சதுப்பு நிலம், ஆதாம் பாலம் தேசிய பூங்கா ஆகியவை 11

## பேருந்து கட்டணம் அதிகரிக்கப்படாது!

### தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

கொழும்பு, பெப். 02

எரிபொருள் விலை நேற்று நள்ளிரவு முதல் அதி கரித்தபோதிலும் பேருந்து கட்டணம் அதிகரிக்கப் படாது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பேருந்து கட்டணம் தொடர்பில் தற்போதுள்ள சட் டங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் பிரகாரம் தற்போ தைக்கு பேருந்து கட்டணத்தை அதிகரிக்க முடியாது. பேருந்து கட்டணத்தை அதிகரிக்க வேண்டுமா யின் உடன்படிக்கைகளின் பிரகாரமே மேற்கொள் ளப்பட வேண்டும் - என்று அந்த ஆணைக்குழுவின் 11

## இலங்கை மின்சார சபையின் சட்ட செலவு 13 கோடி ரூபாய்!

கொழும்பு, பெப். 02

இலங்கை மின்சார சபையின் சட்ட செலவு மட்டும் 13 கோடி ரூபாய் என்று அந்த சபையின் பொறியியலா ளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சின் விடயத்துக்குப் பொறுப்பான செயலா ளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்த்தனவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர்கள் இதனை தெரிவித்துள் ளனர். அரச நிறுவனமொன்றின் உத்தியோகத்தர், 11

### தெற்கு - வடக்கு, கிழக்கில்

## வெவ்வேறு சட்டமெனில் தனிநாட்டை தாருங்கள்!

### கருணாகரம் எம். பி.

மட்டக்களப்பு, பெப். 02

தெற்கில் ஒரு சட்டம், வடக்கு - கிழக்கில் ஒரு சட் டத்தை அமுல்படுத்துவீர்களாக இருந்தால் வடக்கு, கிழக்கை பிரித்து தனிநாடாகத் தர வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவேந்தல் கடந்த 2022ஆம் ஆண்டு நினைவேந்தப்பட்டது. இதில் பங்கேற்ற கருணாகரம் எம். பி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் 11

# இப்படியும் நடக்கிறது

தேசிய சமாதானப் பேரவையின் அமைப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா நேற்று 'ஈழநாடு'வில் எழுதியிருந்த கட்டுரை ஒன்றில் தெரிவித்திருந்த கருத்தை வாசகர்கள் படித்திருப்பார்கள்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் பதவிக்காக நடைபெற்ற தேர்தலில் சிவஞானம் சிறீதரன் வெற்றி பெற்றிருந்ததை அவர் தனது கட்டுரையில் விமர்சித்திருந்தார்.

அவருக்கு மாத்திரமின்றி அவரைப் போன்ற பலருக்கும் தெற்கில் அந்த தேர்தல் முடிவு அதிர்ச்சியளித்திருந்தது என்பது தெரிந்ததுதான்.

சம்பந்தருக்குப் பிறகு தமிழர்களின் தலைமைப் பாத்திரம் யாருக்கு வரும் என்று அவர்கள் நம்பிக்கொண்டிருந்தார்களோ அந்த நம்பிக்கை தகர்ந்து போனபோது அவர்களால் அதனை ஜீரணிக்க முடியவில்லை என்பது அவரின் கட்டுரையில் தெரிந்தது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசுக் கட்சியின் தலைவரின் ஆரம்ப அறிவிப்புகள் தமிழ்த் தேசிய வாதத்தின் அடிப்படையிலான ஒரு கடும் நிலைப்பாட்டை அவர் கொண்டிருப்பதை உணர்த்துகின்றன என்ற அவரின் கவலை புரிந்துகொள்ளக்கூடியதுதான்.

அவரின் கட்டுரையில் அவர் தெரிவித்திருக்கின்ற முக்கியமான பகுதி இதுதான்:

'தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் அதிக பெரும்பான்மை வாக்குகள் வித்தியாசத்தில் தேர்தலில் வெற்றி பெறவில்லை. தேசிய அரசியல் நீரோட்டத்தில் பெரும்பங்கு வகித்த அவரின் போட்டியாளர் 43 சதவீதத்துக்கும் நெருக்கமான வாக்குகளைப் பெற்றிருக்கிறார்.

சமரச பேச்சு மற்றும் விட்டுக் கொடுப்பை அடிப்படையாகக் கொண்ட பாதை நிராகரிக்கப்படக் கூடாது என்ற விளக்கப்பாடு தமிழ் சமூகத்துக்குள் இருப்பதை இது வெளிக்காட்டுகிறது.' - இதுதான் ஜெகான் பெரேராவின் வரிகள்.

தேசிய நீரோட்டத்தில் பெரும் பங்கு வகித்தவர் என்று அவர் யாரைக் குறிப்பிடுகின்றார் என்பது இங்கே பெயர் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதல்ல.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தேசிய அரசியல் நீரோட்டத்தில் பங்கு வகிக்கிறார் என்று குற்றஞ்சாட்டியே அவரோடிருந்த தந்தை செல்வா என்று நாம் அறிந்திருக்கின்ற எஸ். ஜே. வி. செல்வநாயகம் அதிலிருந்து வெளியேறி தமிழ் அரசுக் கட்சியைத் தொடங்கினார். எந்தக் காரணத்துக்காக தந்தை செல்வா காங்கிரஸிலிருந்து வெளியேறி னாரோ - அவர் எதிர்த்த அந்த விடயத்துக்கு தமிழ் அரசின் பொதுச் சபையில் நாற்பத்து மூன்று வீதமானவர்கள் ஆதரவளித்திருக்கின்றனர் என்கிறார் ஜெகான்.

நல்லவேளை, கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ் அரசுக்கு வாக்களித்த சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் வாக்காளர்களில் சுமந்திரனுக்கு வாக்களித்தவர்களும் தேசிய அரசியல் நீரோட்டத்தில் அவர் வகித்த பங்குக்கு ஆதரவான வாக்குகள் என்று அவர் எழுதாமல் விட்டுவிட்டார்.

அதிகம் ஏன்?, கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியத்தைப் பேசிய கட்சிகளுக்குக் கிடைத்த வாக்குகள் சுமார் இரண்டு இலட்சம் தான். ஆனால், அதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் தேசியக் கட்சிகள் என்று மற்றையவர்கள் பெற்ற வாக்குகள் ஒரு இலட்சத்துக்கும் சற்று அதிகம்.

அதுவல்ல இன்று இங்கே நாம் கவனிக்க வேண்டியது. தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் பதவிக்காக நடந்த தேர்தலில் சிறீதரன் தோல்வியடைந்திருந்தால், தெற்கு அதனை எப்படி கொண்டாடியிருக்கும் என்பதை ஜெகானின் கட்டுரை நமக்கு சொல்லியிருக்கிறது. தமிழ் அரசின் பொதுச் சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையான வர்கள் தமிழ் அரசின் மானத்தைக் காப்பாற்றியிருக்கிறார்கள்.

பொதுச் செயலாளர் பதவி உட்பட மற்றறைய பதவிகளுக்காக கடந்த 27ஆம் திகதி தமிழ் அரசின் மத்திய செயல்குழுவும் பொதுச் சபையும் திருகோணமலையில் கூடியிருந்த அன்று,

நண்பகல் கடந்து சில மணி நேரங்கள்தான் சென்றிருக்கும் அங்கு என்ன நடக்கின்றது என்பதை அறிவதில் இந்த ஊர்க்குருவி அதிக நாட்டம் கொண்டிருக்கவில்லை.

தலைவர் பதவிக்காக நடந்த தேர்தலில் ஒருவர் வெற்றிபெற்றால் அவர் விரும்புகின்ற ஒருவர்தான் பொதுச் செயலாளராக வருவார். இல்லையெனில் அதற்கும் தேர்தல் நடந்தால் அவரின் ஆதரவாளர்கள் இவர் சொல்கின்ற ஒருவருக்குத்தானே வாக்களிப்பார்கள். அதனால், அங்கே ஒரு சுமுகமான பதவிப் பிரிப்புகள்தான் நடக்கும் என்ற எதிர்பார்ப்பும் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனால், கொழும்பிலிருந்து ஒரு சிங்கள நண்பர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டார்,

"தமிழ் அரசின் கட்டுப்பாடு இப்போது அவர் கைகளில் வந்துவிட்டதாமே?" என்று.

எனக்கு எதுவும் புரியவில்லை. அவரிடமே விவரம் கேட்டேன். "இல்லை இன்று நடந்த கட்சியின் மற்றைய பதவிகளுக்கான தெரிவில் கட்சியை கட்டுப்படுத்தும் அதிகாரம் அவரிடம் வந்துவிட்டது என்று சிலர் சமூக வலைதளங்களில் எழுதுகிறார்கள்" என்றார்.

அப்போதுதான், அவர் எதனைச் சொல்கிறார் என்பது புரிந்தது. "கொஞ்சம் பொறுங்கள். திருமலை செய்திகளை அறிந்து சொல்கிறேன்" என்று அவரிடம் கூறிவிட்டு,

திருகோணமலையில் இருந்த சில ஊடக நண்பர்களுடன் பேசியபோது அங்கு நடக்கும் களேபரங்கள் பற்றி விலாவாரியாகக் கூறினார்கள்.

இனி அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது தமிழ் அரசின் தலைவரின் பணி. புதிதாக பொதுச் செயலாளர் பதவிக்காக பொதுச் சபையில் நியமனங்களை கோரி அதற்கு தேர்தல் நடத்துவதா? அல்லது அன்று மத்திய செயல்குழுவில் எடுக்கப்பட்ட முடிவை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது குறித்து பொதுச் சபையில் முறையான தேர்தலை நடத்துவதா? என்பது குறித்து அவர்கள் முடிவு செய்யட்டும். ஏனெனில், அன்று பொதுச் சபையில் நடந்த வாக்கெடுப்பு ஒழுங்காக நடக்கவில்லை என்றும் பல பொதுச் சபை உறுப்பினர்கள் வெளியே சென்றுவிட்ட நிலையில் வெறுமனே கைகளை உயர்த்தி கணக்கெடுப்பு நடத்தியது தவறு என்றுமே அவர்கள் வாதிடுகின்றார்கள்.

ஆக, அந்தப் பத்தியில் தமிழ் அரசுக்கான தலைவர் தேர்தலுக்கு முன்னதாக நாங்கள் எழுதிய சில விடயங்கள் சரியானவைதான் என்பதையே இப்போது நடக்கின்ற விடயங்கள் உணர்த்துகின்றன. அதனையே ஜெகான் பெரேரா போன்றவர்களும் இன்று உறுதி செய்கின்றனர்.

**- ஊர்க்குருவி.**



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேரகப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கும்பாபிஷேக தின சகஸ்ர சங்காபிஷேக விழாவின் போது பரிவார மூர்த்திகள் சகிதம் சுவாமி வெளிவீதியுலா வந்த காட்சி.

## தவணை முறையில் பணம் செலுத்தி மின்சார இணைப்பைப் பெறமுடியும்

கொழும்பு, பெப். 02

புதிய மின் இணைப்புகளுக்கு ஒரே நேரத்தில் பணம் செலுத்த முடியாத விண்ணப்பதாரர்கள் தவணை முறையில் பணம் செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மின்சார சபையிடம் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மின்சார சபையின் எஞ்சிய சேவைகளுக்கு தவணை முறையில் பணம் செலுத்துவதற்கு வசதி செய்து தருமாறு பணிப்புரை விடுத்ததாகவும் இந்த வசதிகளை விரைவில் அறிவிக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கமைய, இந்த வருட மின் உற்பத்தித் திட்டம், அட்டவணை, சேவைச் செலவுகள், மின்சார உற்பத்திக்கு தேவையான எரிபொருளின் விலை, கால நிலை முன்னறிவிப்புகள் தொடர்பில் மின்சார சபையின் செயற்பாட்டுப் பிரிவுடன் கலந்துரையாடியதாக அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## நெல் கொள்வனவு தனியாருக்கு; விவசாயிகளை மேலும் பாதிக்கும்!

கிளிநொச்சி, பெப். 02

நெல் சந்தைப்படுத்தல் சபையை விடுத்துத் தனியாருக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு அனுமதிப்பது என்பது தொடர்பான விவசாய அமைச்சரின் கருத்து மனவேதனையளிக்கிறது என இரணைமடு கமக்காரர் அமைப்புகளின் சம்மேளன செயலாளர் முத்து சிவமோகன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அவர் கிளிநொச்சியில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்த காலபோக செய்கையில், விளைச்சலில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்ட நிலையில் அரசாங்கத்திடம் இழப்பீடு கேட்டு நிற்கின்ற நேரத்தில் அரசாங்கம் நெல்லையும் கொள்வனவு செய்யாது தனியாருக்கு வழங்கினால், தனியார் நினைத்த விலையில் கொள்வனவு செய்வார்கள். தனியார் இன்னும் குறைந்த விலையில் நெல்லை கொள்வனவு செய்வார்கள். இதன் காரணமாக விவசாயிகளே பாதிக்கப்படுவார்கள் - என்றார்.

(ஐ)

## தீர்வு இல்லையேல் பஸ் கட்டணம் உயரும்!

கொழும்பு, பெப். 02

தனியார் பேருந்து சங்கங்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால் எதிர்வரும் இரண்டு வாரங்களில் பேருந்து கட்டணங்கள் 10 சதவீதத்தால் அதிகரிக்கப்படும் என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று நள்ளிரவு முதல் டீசல் விலை 5 ரூபாயால் அதிகரிக்கப்பட்டபோதிலும் குறைந்தபட்ச பஸ் கட்டணம் 35 ரூபாயாகவே இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

## நிகழ்நிலை காப்பு சட்டம் பேஸ்புக் நிறுவனம் கவலை!

கொழும்பு, பெப். 02

இணைய குற்றங்களைத் தடுப்பதற்குப் பதிலாக, இந்தச் சட்டத்தின் நோக் கம், ஜனநாயகக் கொள்கைகளுக்கு எதிரான படையெடுப்பாகவே கருத முடியும் - என்று பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நேற்று முதல் நிகழ்நிலை காப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. பல தரப்பினரின் எதிர்ப்புக்கு மத்தியில் இந்த சட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

70 வீதத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் இந்த சட்டம் பற்றி அறிந்திருக்கவில்லை. கூகுள், மெட்டா, பேஸ்புக் போன்ற நிறுவனங்களை உள்ளடக்கிய கூட்டமைப்பு, இந்த சட்டம் அமுல்படுத்த முடியாத ஒரு சட்டம் எனக் கூறியுள்ளன.

இணைய குற்றங்களைத் தடுப்பதற்குப் பதிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கம், ஜனநாயகக் கொள்கைகளுக்கு எதிரான படையெடுப்பாகவே கருத முடியும். என அவர் மேலும் கூறினார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
02.02.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், தை 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சிறீதரன் என்ன செய்யப் போகின்றார்?

திருகோணமலையில் இடம்பெற்ற தமிழ் அரசுக் கட்சியின் செயல்குழுக் கூட்டத்தின்போது பொதுச் செயலாளர் தெரிவு செய்யப்பட்டாரென அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்தத் தெரிவை ஏற்கமுடியாது என்று கட்சியின் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட உறுப்பினர்கள் போர்க் கொடி தூக்கியதைத் தொடர்ந்து கட்சியின் தேசிய மகாநாடு பிற்போடப்பட்டது. இந்த நிலையில் அடுத்தது என்ன என்னும் கேள்வியுடன் கட்சியின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் குறித்த தெரிவு சட்டரீதியானது என்றும் அதனை அமுல்படுத்தும் வகையில் கட்சியின் தேசிய மகாநாட்டை கூட்டுமாறும் கோரி கட்சியின் முன்னணி தலைவர்களில் ஒருவரான எம். ஏ. சுமந்திரன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார். அந்தக் கடிதம் ஊடகங்களில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. இப்போது பந்து சிறீதரனின் கையில் இருக்கின்றது. அதனை அவர் எவ்வாறு எறியப் போகின்றார்?

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வரலாற்றில் ஜனநாயக ரீதியான முறையில் புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் பல புகழாரங்கள் சூட்டப்பட்டபோதிலும்கூட குறித்த ஜனநாயக முறையிலான தெரிவுதான் தற்போது பிரச்னையாகவும் மாறியிருக்கின்றது.

கட்சியின் நிலைமை மோசமடைந்திருக்கின்றது. அவ்வாறாயின், அதனை ஒரு ஜனநாயக வெற்றியென்று வாதிட முடியாது - ஏனெனில், உண்மையிலேயே கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் ஜனநாயகம் தொடர்பான கரிசனை இருந்திருந்தால் இவ்வாறானதொரு போட்டி நிலை இடம்பெற்றிருக்காது. கட்சிக்குள் கைகலப்பு வரையில் சென்றிருக்க வேண்டியதுமில்லை. தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட முக்கிய உறுப்பினர்களுக்கு திருகோணமலை பொலிஸார் வகுப்பெடுத்துக் கொண்டிருக்கின்றனர். தமிழ்த் தேசியம் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் தீர்வை கோரி நிற்கின்றது.

சிறீதரன் கட்சியின் தலைவராகத் தெரிவானதிலிருந்து கட்சிக்குள் அமைதியில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஓர் உறையில் இரண்டு கத்திகள் இருப்பதான சூழலே கட்சியின் தற்போது உள்ளக நிலைமையாகும். ஓர் உறைக்குள் ஒரு கத்திதான் இருக்கலாம். ஒன்றில் அந்தக் கத்தி சிறீதரனாக இருக்க வேண்டும் அல்லது இன்னொருவராக இருக்க வேண்டும். இரண்டு கத்திகளும் அவ்வப்போது உரசிக் கொண்டால் இவ்வாறான முரண்பாடுகளே அடிக்கடி வெளிப்படும்.

கட்சி, சிறீதரனால் முழுமையாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் - இல்லாவிட்டால் கட்சியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியாத ஒரு தலைவராகவே சிறீதரனின் நிலைமை தொடரும். சுமந்திரன் குறிப்பிடுவது போன்று தெரிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது புதிய தெரிவை செய்யவுள்ளதாக பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அந்த சவாலை சிறீதரன் ஏற்றுக்கொள்ள வேண்டும். தற்போதுள்ள நிலையில், கட்சியை முன்கொண்டு செல்ல முடியாமல் சிறீதரன் தடுமாறுவது போன்றதொரு தோற்றமே தெரிகின்றது. அதற்கு அவர் முற்றுப்புள்ளியிட வேண்டும்.

போட்டியின் மூலமாக தலைவரான சிறீதரன் எதிர்காலத்தில் போட்டிகளுக்கான களத்தைத் திறந்து வைத்திருக்க வேண்டிய நிலையிலேயே இருக்கின்றார். இனிவரும் காலத்தில் தமிழ் அரசுக் கட்சிக்குள் எடுக்கப்படும் தீர்மானங்களுக்குக்கூட வாக்கெடுப்பைக் கோரும் நிலைமையே ஏற்படும்.

சிறீதரன் தலைவரானதைத் தொடர்ந்து 2009இற்கு முன்னரான கூட்டமைப்பை உருவாக்கப் போவதாக அறிவித்தார். ஆனால், தற்போதைய நிலையில் தமிழ் அரசுக் கட்சியின் பிரச்னைகளையே அவரால் தீர்க்க முடியாமல் இருக்கின்றது. தனது தலைமையின்மீது மற்றவர்கள் நம்பிக்கை வைக்குமளவுக்கு சிறீதரன் துணிகரமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். சுமந்திரன் சுட்டிக்காட்டியிருப்பது போன்று சிறீதரன் இப்போது குத்துச் சண்டை களத்துக்குள் இருக்கின்றார். ஒன்றில், அவர் அடிக்க வேண்டும் அல்லது அடிவாங்க வேண்டும்.

## புதிய இந்திய தூதுவர் சந்திரிகாவுடன் சந்திப்பு



*கொழும்பு, பெப். 02*

*முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா.*

*இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இரு தரப்பு உறவுகளில் அண்மையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பபட்டது. (ஐ)*

## கண்டாவளையில் மண் அகழ்வு பிரதேச செயலாளர் கள ஆய்வு!

*கிளிநொச்சி, பெப். 02*

*கண்டாவளையில் பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியை அண்மித்து இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலாளர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டார்.*

*குறித்த பகுதியில் மணல் மாபியாக்களால் கனரக வாகனம் கொண்டு அச்சம் இல்லாது சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றமை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது.*

*இந்த விடயம் தொடர்பில் 3 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளை அழைத்து அமைச்சர் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார்.*

*இந்த நிலையில், குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் பிற்பகல் சென்ற கண்டாவளை பிரதேச செயலாளர் கள நிலைமைகளை கண்காணித்ததுடன், மணல் அகழ்வை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் கிராம சேவையாளர் மற்றும் கிராம மட்ட அமைப்புகளின் ஒத்துழைப்புடன் பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.*

*சட்ட விரோத மணல் அகழ்வுக்கு 10 நாட்களுக்குள் நிரந்தரத் தீர்வை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்று தருவதாகக் கூறியுள்ள நிலையில், தற்போது இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.*

*இரணைமடுக்குளத்தின் கழிவுநீர் வாய்க்கால் மற்றும் பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியை மிக அண்மித்து காணப்படுவதால், எதிர்காலத்தில் மிகப் பெரிய அனர்த்தங்களையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.*

*மேலும், பனை அபிவிருத்தி கூட்டுறவு சபையால் அமைக்கப்பட்ட சுற்றுமதிலும் இதனால் பாதிக்கப்பட்டு விழுந்துள்ளதாகவும் அந்தச் சபையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.*

*சுற்றாடல் மற்றும் இடர் ஏற்படும் வகையில் அபாயகரமாக உள்ள பகுதியை பாதுகாக்க அனைவரும் விரைந்து செயல்பட வேண்டும் என கண்டாவளை பிரதேச மக்களும் விவசாயிகளும் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (ஐ)*

## மக்களின் அவசிய தேவைகளுக்கு பன்முக நிதியில் முன்னுரிமை!

### அமைச்சர் டக்ளஸ்

*யாழ்ப்பாணம், பெப். 02*

*மாவட்டத்துக்குக் கிடைத்த பன்முகப்படுத்தப்பட்ட நிதியை மக்களின் அவசிய தேவைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பயன்படுத்துவதையே தான் விரும்புவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.*

*நேற்று வேலணை பிரதேச செயலகத்தில் நடந்த அபிவிருத்தி குழு கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எமது மக்களுக்கானதாக பயன்படுத்துவதே எனது வழமை. அதற்கிணங்க சுமார் மூன்று வருடங்களுக்கு பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஊடாக எமது மாவட்டத்துக்கும் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், அதனை உச்ச பட்சமாக மக்களின் அவசிய தேவைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பயன்படுத்துவதையே நான் விரும்புகிறேன்.*

*அத்துடன், அதனை உறுதிப்படுத்த வேண்டிய தேவை அதிகாரிகள் முதல் கொண்டு பொதுமக்களிடமும் இருக்க வேண்டும். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பெப்ரவரி - 02 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - தை 19
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : அஷ்டமி




**மேடம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். கடன் சுமை நீ ங்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
தடைகளை கண்டு தளர மாட்டீர்கள்.விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினரின் ஆதரவுபெருகும். நீண்டநாள் பூர்வீகசொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும்இளமையும் கூடும். வியாபாரத்தில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்லவாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று வருந்துவீர்கள். எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும் நாள்.

**துலாம்**
கணவன் மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. மறைமுக எதிர்ப்புகள்வந்து போகும். எதிலும் பொறுமை தேவைப்படும்நாள்.

**விருட்சிகம்**
திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். இனிமையான நாள்.

**தனுசு**
சொன்ன சொல்லை கப்பாற்றதுடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும்.

**மகரம்**
உங்கள் பிடிவாதப் போக்கைகொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் சில சூட்சமங்கள் கற்றுக் கொள்.

**மீனம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். எதிர்பாராதவெற்றி கிடைக்கும் நாள்.

# ஈழத்தமிழருக்கு எதிரான குடியுரிமை சட்டத்தை தமிழக அரசு அனுமதிக்காது

## தமிழ்நாடு முதலமைச்சர் உறுதி

சென்னை, பெப். 02

இலங்கை தமிழர்கள், முஸ்லிம்களுக்கு எதிரான குடியுரிமை திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை தமிழகத்தில் அரசு அனுமதிக்காது என்று முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின் சென்றுள்ள முதல்வர் ஸ்டாலின், நேற்று வெளியிட்ட சமூக வலைதள பதிவில் கூறியிருப்பவை வருமாறு,

நாடு முழுவதும் குடியுரிமை திருத்த சட்டம் (சி. ஏ. ஏ.) 7 நாட்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்று மத்திய பா. ஜ. க. இணை அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கை தமிழர்கள், முஸ்லிம்களுக்கு எதிரான குடியுரிமை திருத்தம் சட்டம் உருவானதற்கு முழு முதல் காரணமே பாராளுமன்றத்தில் அ. தி. மு. க. ஆதரித்து வாக்களித்தது தான்.

தி. மு. க. அப்போது எதிர்க்கட்சியாக இருந்தாலும், தோழமை இயக்கங்களுடன் இணைந்து பெரிய அளவில் போராட்டங்கள் நடத்தியதுடன், 2 கோடி பேரிடம் கையெழுத்து பெற்று குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தது.

2021இல் ஆட்சிக்கு வந்த உடனே சி. ஏ. ஏவை திரும்ப பெற வலியுறுத்தி சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினோம். தமிழகத்தில் குடியுரிமை திருத்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை தி. மு. க. அரசு ஒருபோதும் அனுமதிக்காது. உறுதியாக சொல்கிறேன். தமிழகத்துக்குள் குடியுரிமை திருத்த சட்டம் கால் வைக்க விடமாட்டோம் - என்றார். (ஐ)

# குடியுரிமை திருத்த சட்டத்தை அ. தி. மு. க. அனுமதிக்காது!

## பழனிசாமி தெரிவிப்பு

சென்னை, பெப். 02

குடியுரிமை திருத்தச் சட்டத்தால் தமிழகத்தில் உள்ள இஸ்லாமியர்களுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் பிரச்னை ஏற்பட்டால் எங்கள் அரசு பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது என்பதை ஏற்கெனவே எங்களது ஆட்சியின் போது சட்டமன்றத்திலேயே நாங்கள் தெரிவித்தோம் - என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

ஆனால், மதவாத நாடக எதிர்ப்பு ஒன்றையே அரசியல் மூலதனமாக்கி, சிறுபான்மை மக்களை ஏமாற்றி, ஆட்சியில் இருக்கும்போது பாஜகவுடன் கூட்டு, ஆட்சியில் இல்லாத போது எதிர்ப்பு என்று சிறுபான்மையினருக்கு துரோகம் செய்து வருகிறது தி. மு. க.

கோவை கலவரத்தை கைகட்டி வேடிக்கை பார்த்து இஸ்லாமியர்களின் முதுகில் குத்திய திமுகவுக்கு, எங்களை நோக்கி கை நீட்ட எந்த அருகதையும் இல்லை.

“குடியுரிமை திருத்தச் சட்டத்தால் (சி. ஏ. ஏ.) சிறுபான்மையின மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை அ. தி. மு. க. ஒருபோதும் அனுமதிக்காது - என்றார். (ஐ)

# தமது விடுதலையை வலியுறுத்தி பயஸ், முருகன் உண்ணாவிரதம்!

திருச்சி, பெப். 02

திருச்சி சிறப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முருகன், ரொபேர்ட் பயஸ் ஆகியோர் தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்ட முருகன், சாந்தன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் இலங்கையை சேர்ந்தவர்கள் என்பதால் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு சாந்தனுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால், சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள முருகன், தன்னை விடுதலை செய்து, குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ அனுமதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 28ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இதேபோல ரொபேர்ட் பயஸும் தன்னை விடுதலை செய்ய வலியுறுத்தி நேற்றுமுன்தினம் முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார். மேலும், இது தொடர்பாக தமிழக முதல்வர் மற்றும் தலைமைச் செயலருக்கு இருவரும் தனித்தனியாக கடிதம் எழுதியுள்ளனர். இதையொட்டி, சிறப்பு முகாமில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாருடன் கூட்டணி என அறிவிக்காமல் பா. ம. கவின் பொதுக்கூட்டம் நிறைவு!

சென்னை, பெப். 02

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மற்றும் மாநில நலனில் அக்கறை கொண்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவது எனவும் யாருடன் கூட்டணி என்பது குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் கட்சியின் நிறுவுநர் ராமதாஸூக்கு வழங்குவது என்றும் பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், பாராளுமன்றத் தேர்தல், தமிழகத்தின் நலன்களை பாதுகாப்பதில் முக்கியமானது என்று பா. ம. க. கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்திய அரசமைப்பு சட்டம் இயல்பாகவே மத்திய அரசும், மாநில அரசுகளும் இணைந்து செயல்படுவதை உறுதி செய்கிறது. அதற்கேற்ற வகையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் அமைக்கப்பட்டதன் நோக்கம் ஒட்டு மொத்த இந்தியாவின் அரசு நிர்வாகம் எந்த சிக்கலும் இல்லாமல் இயங்க வேண்டும் என்பதுதான். இதை மத்திய, மாநில அரசுகள் புரிந்து கொண்டு செயல்படும் வரை யாருக்கும் பாதிப்பும் இல்லை.

2024 பாராளுமன்றத் தேர்தலில் மாநில நலனிலும், தேசிய நலனிலும் அக்கறை கொண்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிட பாமக சிறப்பு பொதுக்குழு கூட்டம் தீர்மானிக்கிறது. எந்த கட்சியுடன் கூட்டணி அமைப்பது என்பது குறித்து முடிவெடுக்கும் அதிகாரத்தை கட்சியின் நிறுவனர் ராமதாஸூக்கு அதிகாரத்தை வழங்குகிறது -இந்தத் தீர்மானங்கள் உட்பட நேற்று நடந்த கூட்டத்தில் 24 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ஐ)

# ஊடகவியலாளர்கள் எப்போதுமே சமூகத்தை கொந்தளிப்பாக வைத்திருக்க முனைகின்றனர்!

## யாழ். அரச அதிபர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 02

**சமூகத்தை எப்போதும் ஒரு கொந்தளிப்பான நிலையில் வைத்திருக்கவேண்டும் என்ற மனப்பான்மையோடு மிகவும் கீழ்த்தரமானநிலையில்தற்போதுள்ளஊடகவியலாளர்கள் செயற்படுகின்றார்கள் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.**

ஊடக அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு ஊடகவியலாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிப்பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதுள்ள நெருக்கடி நிலையில் நாட்டினை எவ்வாறு முன்னோக்கிக் கொண்டு செல்லலாம் அல்லது எமது பிரதேசத்தில் உள்ள சவாலான விடயங்கள் உதாரணமாக டெங்கு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில்ஆராய்ந்து அறிக்கையிடலாம். ஆனால் தற்போதைய நிலையில் அவ்வாறான ஒன்றும் நடைபெறவில்லை.

இருக்கின்ற பிரச்னையை இன்னும் கொஞ்சம் கிளப்பிவிட்டால் செய்தி கொஞ்சம் பரபரப்பாகப் போகும். அந்த நிலையில் தான் தற்போது ஊடகவியலாளர்கள் செயற்படுகிறார்கள்.

அந்த விடயம் மாற்றப்படவேண்டும். முதுகில் புண் இருந்தால் தான் காடு நுழைய பயம் என்று கூறுவார்கள். என்னுடைய முதுகில் புண் இல்லை. நான் எதற்குள்ளும் புகுந்து விடுவேன்.

ஆனால் முதுகில் புண்ணை ஏற்படுத்தும் வேலையை தற்போது ஊடகவியலாளர்கள் செய்கின்றார்கள். மறைமுகமாக அச்சுறுத்துகின்றார்கள்.

ஊடகவியலாளர் தான் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அந்த பொறுப்பை சரியாக நீங்கள் செய்ய வேண்டும். உங்களுடைய நாக்கினாலும் பேனையாலும் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சக்தி காணப்படுகின்றது.

எனவே இன்றைய பயிற்சிப் பட்டறையின் மூலம் மாற்றங்கள் ஏற்படவேண்டும். யாழ்ப்பாண மாவட்டம் டெங்கில் முன்னணியில் உள்ளது.

கடந்த இரண்டு மூன்று மாதங்களாக டெங்கு சம்பந்தமான விடயத்தை நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். டெங்கு தொடர்பில் ஊடகங்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்று சமூகத்தில் எங்கெங்கே பிரச்னை காணப்படுகின்றதோ அதனைத்தான் ஊடகங்கள் பார்க்கவேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்தில் ஊடகங்கள் அதனைப் பார்க்கவில்லை. தனிப்பட்ட ரீதியாக தாக்குதல்களை மேற்கொள்கின்றார்கள். அது மாற்றப்படவேண்டும்

நான் சிறுவனாக இருந்த காலத்தில் பத்திரிகைகள் வாசித்து பலவிதமான விடயங்களை அறிந்துகொண்டேன். எனது தந்தையாரும் அதனை ஊக்கப்படுத்தினார்.

ஆனால் தற்பொழுது எனது பிள்ளைகளுக்கு கூறும் விடயம் பத்திரிகைகள் வாசிக்காதீர்கள். ஏனென்றால் தனிப்பட்ட ரீதியாக தாக்குகின்றார்கள். நான் எனது பிள்ளைகளுக்கு கூறியிருக்கின்றேன் பத்திரிகையை வாசிக்காதீர்கள் என்று.

எனவே ஊடகவியலாளர்கள் இந்த விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். நாட்டினை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் ஊடகவியலாளர்களுக்கும் அதிக பங்கு உண்டு. எனவே எதிர்காலத்தில் ஊடகவியலாளர்கள் அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்-என்றார். (அ)

# 3 யுவதிகளுடன் சிவில் உடையில் சென்ற பிக்குவுக்கு மக்கள் எதிர்ப்பு!

கொழும்பு, பெப். 02

அளுத்கம, வெலிப்பன்ன பிரதேசத்திலுள்ள விகாராதிபதி யொருவர் சிவில் உடையில் 3 இளம் யுவதிகளுடன் லுணுகம் வெஹர மற்றும் திஸ்ஸமஹாராம பிரதேசங்களுக்கு உல்லாசமாக சுற்றுலா சென்றபோது பொதுமக்களல் பிடிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து, அவர் தங்கியிருந்த விகாரையில் பொதுமக்கள் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் விகாராதிபதி அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

அளுத்கம வெலிபன்ன தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, வெலிப்பன்ன பொலிஸ் பிரதேசத்தில் அமைந்துள்ள விகாராதிபதி சிவில் உடை அணிந்து மூன்று இளம் யுவதிகளுடன் கதிர்காமம் லுனுகம் வெஹெர திஸ்ஸமஹாராம பிரதேசத்திற்கு உல்லாசச் சுற்றுலா சென்றுள்ளார்.

அதே நாளில், மேற்கூறிய பகுதிகளுக்கு சுற்றுலா சென்ற, வெலிப்பன்ன பகுதி இளைஞர்கள் குழுவொன்று, 3 யுவதிகளுடன் பிக்கு "ஆன்மீக சுற்றுலா" செல்வதை கண்டு அதிர்ச்சியடைந்து, அவர்களை வீடியோ எடுத்தனர். அதை முகநூல்களிலும் பதிவிட்டனர்.

உல்லாசப் பயணத்தை முடித்துக் கொண்டு பிக்கு விகாரைக்கு திரும்பிய போது, கடந்த 29ஆம் திகதி இரவு விகாரை முன்றலில் பெருமளவான மக்கள் திரண்டு பிக்குவுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, அவர் விகாரையை விட்டு வெளியேறினார். (அ)

# பஸ் கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிக்குமாறு கோரிக்கை!

கொழும்பு, பெப். 02

ஒட்டோ டீசல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் பஸ் கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சரிடம் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், ஆரம்பக்கட்டணத்தை 30 ரூபாவில் இருந்து 34 ரூபாவரை அதிகரிக்குமாறும் கோரியுள்ளனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் இது தொடர்பில் முடிவெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவைக் கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது. எனினும், ஒட்டோ கட்டணங்களில் மாற்றம் வராது என ஒட்டோ சாரதிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். (அ)

# 630 மில்லியன் மின்சார அலகுகள் மின் கட்டமைப்புடன் இணைப்பு!

கொழும்பு, பெப். 02

இலங்கை மின்சார சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட கூரை மீதான சூரிய மின் படலத்தை நிறுவும் வேலைத்திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டில் 630 மில்லியன் மின்சார அலகுகள் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில், இலங்கை மின்சார சபை விடுத்துள்ள அறிக்கையில், நாடு முழுவதிலும் உள்ள நுகர்வோர் இந்த தனித்துவமான தேசிய நோக்கத்திற்காக ஆதரவளித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

மின்சாரத்தைப் பயன்படுத்தும் பாரம்பரிய முறையிலிருந்து விலகி, புதிய தொழில்நுட்ப அனுபவத்தின் மூலம் தேசிய மின் கட்டமைப்பிற்கு மின்சாரத்தை விற்பனை செய்வதற்கு நுகர்வோர் திரும்பியுள்ளனர்.

இதற்கான ஒத்துழைப்புகளை வழங்குபவர்களுக்கு இலங்கை மின்சார சபை பாராட்டு தெரிவிப்பதாக இலங்கை மின்சார சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வங்கியில் எச்சரிக்கை மணி ஒலித்ததால் சிக்கிய திருடன்

கொழும்பு, பெப். 02

பேருவளை காலி வீதியில் அமைந்துள்ள வங்கியொன்றில் நேற்று அதிகாலை 3.45 மணியளவில் நுழைந்த திருடன், வங்கியில் உள்ள எச்சரிக்கை இயந்திரம் ஒலிக்கத் தொடங்கியதும் பீதியடைந்து அறையொன்றுக்குள் ஒளிந்து கொண்டார்.

அவரை பேருவளை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

வங்கியின் எச்சரிக்கை இயந்திரம் ஒலிக்கத் தொடங்கிய நிலையில், பேருவளை பொலிஸ் குழு ஒன்று அதிகாலை 3.50 மணியளவில் வங்கி வளாகத்திற்கு வந்து வங்கிக் கட்டடத்தை சுற்றிவளைத்தது. இதற்கிடையில் பேருவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வங்கி நிர்வாகத்துக்கு சம்பவம் தொடர்பில் அறிவித்ததையடுத்து முகாமையாளர் காலை 6.30 மணியளவில் அங்கு வந்துள்ளார்.

வங்கியின் பிரதான கதவை திறந்து வைத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது கட்டடத்தின் அறையில் பதுங்கியிருந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். வங்கியின் பெட்டகம் அமைந்துள்ள அறையின் கதவை திருடன் உடைத்ததை அடுத்து பாதுகாப்பு சமிக்ஞைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

எச்சரிக்கை மணி ஒலித்ததையடுத்து அந்த நபர் பீதியடைந்து அறையொன்றில் ஒளிந்து கொண்டதாகவும் இதன் காரணமாக வங்கியின் சொத்துக்கள் எதனையும் திருட முடியாமல் போனதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு இழக்கும் இரண்டு முக்கியஸ்தர்கள்!

கொழும்பு, பெப். 02

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால ஆகியோர் விலகியுள்ளனர்.

இருவரும் தமது பதவி விலகல் கடிதங்களை தமக்கு அனுப்பி வைத்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து உடனடியாக விலகுமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால ஆகியோருக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் அறிவித்திருந்தார்.

புதிய கூட்டணி ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ள நிலையில் அவர் இந்த அறிவிப்பை விடுத்திருந்தார்.

அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொண்டதன் காரணமாக அமைச்சர் மஹிந்த அமரவீர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனையடுத்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

இந்தநிலையில், அமைச்சர் மஹிந்த அமரவீர அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்ததுடன், இரு பொதுச் செயலாளர்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

இதன்படி வெற்றிலைச் சின்னத்துடன் கூடிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பெயரை புதிய கூட்டணிக்கு பயன்படுத்தினால் இருவரும் வெளியேறி புதிய செயலாளரை நியமிக்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். (அ)

# அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான விண்ணப்பங்கள் 10ஆம் திகதி முதல் ஏற்பு

கொழும்பு, பெப். 02

அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவுக்கான 400,000 புதிய விண்ணப்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பகுதியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவுக்கான பயனாளர்களைத் தெரிவு செய்வதில் பல்வேறு தரப்பினரிடமும் இருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளுக்கமைய அதில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.



அத்துடன், கடந்த காலங்களில் அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவுக்கான நிபந்தனைகள் கடுமையாக காணப்பட்டமையினால் கொடுப்பனவுகளை பெறாத பயனாளர்கள் இந்த முறை விண்ணப்பிக்க முடியும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.

தற்போது அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 1,700,000 கடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நெல் களஞ்சியசாலை மாபியாக்களினால் விவசாயிகளுக்கு பெரும் நெருக்கடி நிலை!

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 02

**அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு பணம் இல்லையெனக் கூறுகிறது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நெல் களஞ்சியசாலை மாபியாக்கள் மிகக் குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்து, விவசாயிகளை நெருக்கடிக்கு உள்ளாக்க தயாராகி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**




கொழும்பிலுள்ள எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வர்த்தக அமைச்சர் அரிசி இறக்குமதி செய்யப்படும் என்று கூறிய போது, விவசாயத்துறை அமைச்சர் அதனை மறுத்தார். ஆனால் தற்போது சுமார் 50,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. ஒரு புறம் அருவடை ஆரம்பித்துள்ள நிலையில், மறுபுறம் அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது.

கீரிச் சம்பா நெல்லின் விலை 120 ரூவாகக் குறைவடைந்துள்ளது. கொழும்பில் பொன்னி சம்பா 275 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் அரசாங்கம் 260 ரூபாவையே கட்டுப்பாட்டு விலையாக நிர்ணயித்துள்ளது. எனினும் நுகர்வோருக்கு அந்த விலையில் அரிசியைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகிறது.

ஆனால் நாட்டரிசிக்கான நெல் விவசாயிகளிடமிருந்து 80 ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்படுகிறது. பெரும்போகத்தில் 30 இலட்சம் மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்படும். இதன் மூலம் 20 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி கிடைக்கும். வருடத்துக்கான அரிசியின் தேவை 24 இலட்சம் மெற்றிக் தொன் மாத்திரமேயாகும்.

எவ்வாறிருப்பினும் தற்போது மக்களுக்கு அரிசியைப் பெறுவதற்கு கூட பணம் இல்லை என்பதால் 24 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி கொள்வனவு செய்யப்படும் என்று நாம் நினைக்கவில்லை. எனவே அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கு பாரிய வர்த்தகர்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

சதொச மற்றும் மாவட்ட செயலகங்கள் ஊடாக அரிசியை விற்பனை செய்வதற்கு முன்னெடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதால், விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு தம்மிடம் பணம் இல்லை என்று அரசாங்கம் கூறுகிறது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பாரிய வர்த்தகர்கள் குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்து, கூடிய விலையில் அரிசியை விற்பனை செய்வார்கள். இவ்வாறு விவசாயிகளை நெருக்கடிக்கு உட்படுத்தாமல், மாற்று திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்-என்றார். (அ)

# 25 நாட்களுக்குள் 1,189 விபத்துகள்!

## 136 பேர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 02

2024 ஜனவரி 1 முதல் ஜனவரி 25 வரையான காலப்பகுதிக்குள் நாட்டில் ஆயிரத்து 189 வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துகளில் 136 பேர் பலியாகியுள்ளனர். மேலும் சிலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

அதேவேளை, கடந்த ஆண்டு 22 ஆயிரத்து 804 வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளதுடன், அவற்றில் 2 ஆயிரத்து 280 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# விபத்துக்குள்ளாகி சிகிச்சை பெற்ற கிளிநொச்சி இளைஞன் உயிரிழப்பு!

கிளிநொச்சி, பெப். 02

அதிவேகமாக மோட்டார் சைக்கிளில் பயணித்து விபத்துக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த இளைஞன் நேற்று முன்தினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி - ஊற்றுப்புலம் பகுதியைச் சேர்ந்த பொ.அபிசாகன் (வயது 20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் கடந்த 26ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியது. இதன்போது அவர் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை.

இந்நிலையில் அவர் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# 10 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்ற கிராம சேவையாளர் கைது!

கொழும்பு, பெப். 02

10 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டில் கிராம உத்தியோகத்தர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் அம்பாந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இவர் குடியுரிமைச் சான்றிதழ் தொடர்பில் வருகை தந்திருந்த முறைப்பாட்டாளரிடம் இந்த பணத்தை இலஞ்சமாக பெற்றுக் கொண்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைக்காக ஹம்பாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினர் மேலும் தெரிவித்தனர். (அ)

# 18 இந்திய மீனவர்கள் விடுதலை

மன்னார், பெப். 02

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 18 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் நீதி மன்றத்தினால் நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தினால் மன்றில் 3 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டமை, இலங்கை கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டமை மற்றும் இலங்கையில் தடை செய்யப்பட்ட இழுவை மடித் தொழில் முன்னெடுத்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.

குறித்த குற்றச்சாட்டுக்களை விசாரணைக்கு உட்படுத்திய நீதவான் 1 ஆம் மற்றும் 2 ஆம் குற்றச்சாட்டுகளுக்கு 12 மாதங்களும், 3 ஆவது குற்றச்சாட்டுக்கு 6 மாதங்களுக்கு விதிக்கப்பட்டு 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறை தண்டனை வழங்கப்பட்டு இவர்களை நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

மேலும், படகிற்கு குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

இதன்போது அன்றைய தினம் படகின் உரிமையாளர் மன்றில் முன்னிலையாகுமாறு மன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

விடுதலை செய்யப்பட்ட 18 இந்திய மீனவர்களும் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் ஊடாக மிரிஹான நிலையத்துக்கு அனுப்பப்பட்டு நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ)

# 'ஈஸி காஷ்' மையங்களிலும் சோதனை!

கொழும்பு, பெப். 02

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் ஈஸி காஷ், எம் காஷ் போன்ற முறைகளை பயன்படுத்தி போதைப்பொருள் கொள்வனவு செய்வதாக கிடைத்த தகவலுக்கு அமைய போதைப் பொருள் கடத்தலை கட்டுப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரையின் பேரில் புலனாய்வுப் பிரிவின் ஆதரவுடன் நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிலையங்களை உள்ளடக்கிய விசேட நடவடிக்கை நேற்று முன் தினம் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை முன்னெடுக்கப்பட்டது.

1,964 ஈஸி காஷ் மற்றும் எம்-காஷ் மையங்கள், 2,131 அங்கீகரிக்கப்பட்ட தனிநபர் தகவல் தொடர்பு மையங்கள், ரீலோட் மற்றும் பில் செலுத்தும் மொபைல் மெஷின்கள் 1,074 இடங்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட வணிக வங்கிக் கிளைகளைக் கொண்ட 1,202 இடங்களில் இந்தச் செயல்பாடு நடத்தப்பட்டது.

இந்த நடவடிக்கைகளில், சந்தேகத்தின் பேரில் 316 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இருபது சந்தேக நபர்களும், குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பதினொரு சந்தேக நபர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களின் போதைப் பொருள் வலையமைப்பு மற்றும் அவர்கள் சட்டவிரோதமாகச் சம்பாதித்துள்ள சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்தது. (அ)

# ரயில் பொதிப் போக்குவரத்து கட்டணம் 80 வீதத்தால் உயர்வு!

கொழும்பு, பெப். 02

ரயிலில் கொண்டு செல்லப்படும் பொதிகளுக்கான கட்டணம் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ரயில் போக்குவரத்து கட்டணம் நேற்று முதல் 80 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொல குறிப்பிட்டார்.

ரயிலில் கொண்டு செல்லப்படும் பொதிகளுக்கு இதுவரை 50 ரூபாய் கட்டணம் அறவிடப்பட்ட நிலையில் நேற்று முதல் குறித்த கட்டணம் 150 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)

# புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு கெஹலியவுக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, பெப். 02

முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்லவை குற்றப்புலனாய்வுப் பிரிவில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆஜராகுமாறு மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெலவுக்கு வெளிநாட்டு பயணத் தடை விதித்தும் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எங்களுடன் பேச்சுக்களில் ஈடுபடாவிட்டால் நாணய நிதிய கடனை தடுத்து நிறுத்துவோம்

## தனியார் கடன் வழங்குநர்கள் கடும் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 02

**அரசாங்கம் தங்களுடன் நல்லெண்ண அடிப்படையில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளாவிட்டால் சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாம் தவணை கடனை தடுத்து நிறுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடப்போவதாக இலங்கையின் தனியார் கடன் வழங்குநர்கள் எச்சரித்துள்ளனர்.**

சீனா உட்பட இருதரப்பு கடன்வழங்குநர்களுடன் இலங்கை அரசாங்கம் தொடர்பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள அதே வேளை தங்களுடன் அதே போன்ற பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவில்லை என தனியார் கடன்வழங்குநர்கள் கருதுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தனியார்கடன் வழங்குநர்களின் எண்ணிக்கை மிகவும் பெரியது இலங்கை வெறுமனே சர்வதேச நாணயநிதியத்தையும் சீனாவையும் மாத்திரம் நம்பியிருக்க முடியாது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை தங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாவிட்டால் சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாம் தொகுதி கடனை தடுத்துநிறுத்துவதற்காக அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுவோம் என தனியார் கடன்வழங்குநர்கள் குழுவொன்று டெய்லிமிரரிடம் தெரிவித்துள்ளது.

இதுவே தங்களுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளச்செய்வதற்கான ஒரே வழி என கருதுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கையின் அணுகுமுறை குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ள தனியார் கடன்வழங்குநர்கள், இதன் காரணமாக சர்வதேச மூலதனசந்தையில் இலங்கை குறித்த நம்பிக்கை சிதைவடையும் எனவும் கூறினர்.

இலங்கையின் கடன்கள் ஒப்பந்த அடிப்படையிலானவை ஆனால் இலங்கை அவற்றை செலுத்தவில்லை இதனால் சட்டநடவடிக்கைகளை கூட எடுக்கலாம் எனவும் தனியார் கடன்வழங்குநர்கள் தெரிவித்தனர்.

(அ)

# கொழும்பு தாமரை கோபுரத்துக்கு சென்ற 50,000 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்!

கொழும்பு, பெப். 02

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், கொழும்பு தாமரை கோபுரத்திற்கு 50,000 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் விஜயம் செய்துள்ளதாக தாமரை கோபுர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், தாமரைக் கோபுரத்திற்கு விஜயம் செய்த 50,000 ஆவது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிக்கு நிர்வாகத்தினரால் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதி தாமரைக் கோபுரம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# இணையம், கைத்தொலைபேசி ஊடாக போதை வர்த்தகம் செய்த 316 பேர் கைது!

கொழும்பு, பெப். 02

இணையம் மற்றும் கைத்தொலைபேசியின் ஊடாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட 316 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதிலும் நேற்று முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருளை கொள்வனவு செய்வதற்காக, போதைப்பொருள் வர்த்தகர்கள் இணையம் மற்றும் தொலைபேசியினை அதிகளவில் பயன்படுத்துவது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ)

# மக்களின் மௌனத்தை அரசு கீழ்ப்படிதலாக கருதக்கூடாது

## மார்ச் 12 இயக்கம் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 02

அதிகரித்துவரும் வாழ்க்கை செலவு சமாளிக்க முடியாத பட்டினி போன்றவற்றின் மத்தியில் மக்கள் மௌனமாக துயரத்தை அனுபவிப்பதை ஆட்சியாளர்கள் மௌனம் கீழ்படிதல் என கருதக்கூடாது என மார்ச் 12 இயக்கம் தெரிவித்துள்ளது

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்த தனது நிலைப்பாட்டை முன்வைத்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மார்ச் 12 இயக்கம் இதனை தெரிவித்துள்ளது.

மார்ச் 12 இயக்கம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் மூலம் அடிப்படை உரிமைகளிற்கு மிகவும் ஆபத்தானது என்பதையும் இலங்கையின் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஜன நாயக கொள்கைளிற்கு ஆபத்தானது என்பதையும் நாங்கள் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

மேலும் தற்போதைய அரசாங்கம் இந்த சட்டமூலத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதில் காண்பிக்கும் பிடிவாதம் மிக முக்கியமான பொருளாதாரசீர்திருத்த மற்றும் எதிர்வரும் தேர்தல் காலங்களில் கருத்துவேறுபாடுகளை கொண்டவர்களை மௌனமாக்கும் சிவில் செயற்பாடுகளை ஒடுக்கும் அரசாங்கத்தின் நோக்கத்தை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதை கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜனநாயகவிரோத சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு அப்பால்நிறைவேற்றுவதற்கு முந்தைய நீதித்துறை ஆய்வு விடயத்திலும் அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்ட மீறும்வகையில் நாடாளுமன்றம் செயற்பட்டதையும் மே12 இயக்கம் சுட்டிக்காட்டவிரும்புகின்றது.

இதேவேளை மக்களை மௌனமாக்குவதற்காகவும் மக்களையும் கருத்துவேறுபாடுகளை கொண்டவர்களை ஒடுக்குவதற்காகவும் அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் இலத்திரனியல் ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் போன்றவற்றை கொண்டுவருவதற்கு முயல்கின்றது.

அதிகரித்துவரும் வாழ்க்கை செலவு சமாளிக்க முடியாத பட்டினி போன்றவற்றின் மத்தியில் மக்கள் மௌனமாக துயரத்தை அனுபவிக்கும் அதேவேளை ஆட்சியாளர்கள் இந்த மௌனம் கீழ்படிதல் என கருதக்கூடாது.

அரசாங்கத்தின் வலுக்கட்டாய ஆட்சிக்கு எதிரான பாரிய எதிர்ப்பிற்கு முன்னதான நிலைமையே இது.-என்றுள்ளது.(அ)

# மதுபான சாலைகளுக்கு பூட்டு

கொழும்பு, பெப். 02

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இடம்பெறவுள்ள இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இவ்வாறு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படும் என மது வரித் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

# எமது போராட்டங்களை அடக்கவே நிகழ்நிலை காப்புச் சட்டம் அமுல்!

## வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

யாழ்ப்பாணம், பெப். 02

எமது போராட்டங்கள், எமது மக்களின் பிரச்சினைகளை வெளியுலகிற்கு கொண்டு செல்லும் ஊடகங்களை அடக்கவே நிகழ்நிலை காப்பு சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் லீலாவதி ஆனந்தநடராசா தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் லீலாவதி ஆனந்தநடராசாவின் ஊடக சந்திப்பு யாழ். கொடிகாமத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிகழ்நிலை காப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாதச் சட்டம் ஆகிய இரண்டும் இன்று பேசுபொருளாகும். சுயமாக போராடும் இனத்தின் மீது கொண்டுவரப்பட்ட சட்டம் பயங்கரவாத தடைச் சட்டம்.

எமது போராட்டங்கள், எமது மக்களின் பிரச்னைகளை வெளியுலகிற்கு கொண்டு செல்லும் ஊடகங்களை அடக்கவே நிகழ்நிலை காப்பு சட்டம் கொண்டுவரப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் அதற்கு எதிராக பாரிய போராட்டத்தை முன்னெடுத்தார். அதன் போது கூட அடக்குமுறை பாவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கே அப்படி என்றால் எங்கள் நிலை என்னவாக இருக்கும்.

சிங்கள தலைவர்கள் தாங்கள் ஆட்சியில் உள்ள போது ஒரு மாதிரியாகவும், இல்லாத போது இன்னொரு மாதிரியாகவும் செயல்படுகிறார்கள்.

இதுவரை காலமும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளாகிய நாமே போராட்டங்களை முன்னெடுத்து வந்தோம். எங்களுக்கும் வயது முதிர்ந்துள்ளது. ஆகவே பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளைய தலைமுறையினர் இந்த போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும்-என்றார்.

(அ)

# மகிந்தவைப் பார்த்து பயப்படும் அநுரகுமார

## கூறுகிறார் ஜோன்ஸ்டன்

கொழும்பு, பெப். 02

மகிந்த ராஜபக்ஷ மீதுள்ள பயம் காரணமாகவே அனுரகுமார திஸாநாயக்க, அவரது தொண்டியில் இரத்தம் வரும் வரை திட்டுவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போதும் மிகப் பெரிய கட்சியாக பொதுஜன பெரமுனவே இருக்கின்றன. இதன் காரணமாகவே அனுரகுமார போன்றவர்கள் எமது கட்சியை விமர்சிக்கின்றனர்.

ராஜபக்ஷவினர் மிகவும் வலுவாக இருக்கின்றனர். அவர்கள் பலவீனமாக இருந்தால் எவரும் விமர்சிக்க மாட்டார்கள். மகிந்த ராஜபக்ஷ பலவீனமாக இருந்தால் எவரும் அவரை திட்டமாட்டார்கள்.

தேர்தல் நடக்கும் போது நாட்டு மக்கள் சரியான தீர்மானத்தை எடுப்பார்கள்.

காலிமுகத்திடல் போராட்டத்தின் பாடத்தை தற்போது மக்கள் துன்பப்பட்டுக்கொண்டு கற்று வருகின்றனர். போராட்டம் நடத்தியதன் மூலம் கிடைத்த பிரதிபலன் அருமையாக இருக்கின்றதல்லவா?.

போராட்டம் என்ற வார்த்தையை கேட்கும் போது மக்கள் பயப்படுகின்றனர்.

பொது வேட்பாளர் பற்றி பேசினாலும் கடந்த காலங்களில் பல பொது வேட்பாளர்கள் போட்டியிட்டனர். 2015 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த பொது வேட்பாளர் போல் ஒருவர் மீண்டும் ஆட்சிக்கு வந்து விடக்கூடாது. 2015 ஆம் ஆண்டு பொது வேட்பாளரை கொண்டு வந்ததன் காரணமாக நாடு அழிந்து போனது.

ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படும் என நாங்கள் நம்புகிறோம். ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 7 மாதங்கள் இருக்கின்றன. இதனால் நாங்கள் எதற்கும் அவசரப்பட மாட்டோம்-என்றார்.

(அ)

# கிழக்கில் பிடிபடும் கணையான் மீன்கள்

## ரூ.1000 முதல் 9 ஆயிரம் வரை விற்பனை

அம்பாறை, பெப். 02

**திடீர் காலநிலை மாற்றம் காரணமாக அதிகளவான கணையான் மீன் இனங்கள் அம்பாறை மாவட்டத்தின் பிராந் திய ஆற்றோரங்களில் பிடிபடுகின்றன.**



கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட மழை வெள் ளம் காரணமாக கடலை நோக்கி ஓடும் நீரோடைகள் ஆறுகளில் இருந்து 3 வகையான கணை யான் வகை மீன்கள் கரைவலை கள், கட்டுவலைகள், தூண்டில் கள் மூலம் பிடிக்கப்பட்டு பல ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சுமார் 5 முதல் 25 கிலோ எடையுள்ள பாரிய கணையான் மீன் இனங்களே இவ்வாறு மீனவர்கள் பிடித்து வருகின்ற னர்.

இவ்வகையான மீன்கள் ரூபா 1000 முதல் 9 ஆயிரம் ரூபா வரை விற்பனையாகி வரு வதுடன் பொதுமக்களும் ஆர் வத்துடன் கொள்வனவு செய்து வருகின்றனர்.

குறிப்பாக அம்பாறை மாவட் டத்தின் சம்மாந்துறை நிந்தவூர் பாலமுனை அட்டாளைச்சேனை பகுதிகளில் இவ்வாறான மீன் வகைகள் விற்பனை செய்யப்ப டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மீனவர்கள் பிடிக்கப்படும் கணையான் மீன் களை பால் கணையாள் செங்க ணையான் முள்கணையான் என வகைப்படுத்தி விற்பனை செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

## பாலையடி போட்டா வடிச்சல் வாய்க்கால் பல வருடங்களாக சேதமடைந்த நிலையில்



அம்பாறை, பெப். 02

சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட பாலயடி போட்டா , தொய்யம் வட்டை கீழ்க்கண்டம் மற்றும் மேற்கண்டம் ஆகிய சுமார் 300 ஏக்கருக்கும் அதிகமான வயல்நி லங்களில் இருந்து வெளியேற் றப்படும் வடிச்சல் நீர் கிறவல் ஆற்றில் சேருமிடத்திலுள்ள வாய்க்கால் சேதமடைந்து பல வருடங்களாகியும் இன்னும் திருத்தப்படாத நிலையிலேயே காணப்படுவதாக பிரதேச விவ சாயிகள் விசனம் தெரிவிக்கின்ற னர்.

இந்த வாய்க்கால் சேதம டைந்துள்ளதால் இதன் மேலான போடப்பட்டிருந்த கொங்கிறீட் பாலமும் இடிந்து விழுந்துள் ளது. இதனால் ஏனைய வயல்க ளுக்கு செல்லும் விவசாயிகளும் உழவு இயந்திரங்களும் நீண்ட தூரம் சுற்றியே தமது வயல் நிலங்களுக்குச் செல்லவேண்டி யுள்ளது.

அத்துடன் வாய்க்கால் ஆழ மாகவுள்ளதால் இரு புறமும் உள்ள வயல் நிலங்கள் ஒவ்வொரு போகத்தின்போதும் இடிந்து விழுவதால் விவசாயிகள் பல விதமான பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது.

(அ)

## தேசிய மட்ட சதுரங்க போட்டியில் மட்டக்களப்பு மைக்கல் சாதனை



மட்டக்களப்பு, பெப். 02

கல்வியமைச்சும்,அகில இலங்கை பாடசாலைகள் சது ரங்க சம்மேளனமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த அகில இலங்கை பாடசாலைகளுக்கி டையிலான தேசிய மட்ட சது ரங்க போட்டியில் மட்டக்க ளப்பு புனித மைக்கல் கல்லூரி மாணவர்கள் ஐந்து பதக்கங்க ளைப் பெற்று சாதனை படைத் துள்ளது.

குருநாகல் மாவட்டத்திலுள்ள நான்கு பாடசாலைகளில் இப் போட்டிகள் இடம்பெற்றன.

போட்டிகளில் புனித மைக் கல் கல்லூரிக்கு மூன்று முதலி டங்களும்,ஒரு இரண்டாமிட மும்,ஒரு மூன்றாமிடமும் கிடைக்கப் பெற்றன.

9 வயது அணித்தலைவர் சா.ஆரூஸ்மன் 6 போட்டிகளில் 5.5 புள்ளிகளையும், 17 வயது அணித்தலைவர் சு.வியாசகன் 5 போட்டிகளில் 4 புள்ளிகளைப் பெற்று சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்க விடயமாகும்.

(அ)

# கல்முனை வைத்தியசாலையில் உலக தொழுநோய் தின நிகழ்வு





அம்பாறை, பெப். 02

கல்முனை ஆதார வைத்திய சாலையில் தொழுநோய் தினத் தினையொட்டி நேற்று முன்தி னம் வைத்தியசாலையின் கேட் போர்கூடத்தில் தொழுநோய் தின நிகழ்வு நடைபெற்றது.

வைத்தியசாலையின் தோல் நோய் பிரிவினரின் ஏற்பாட்டில் வைத்தியசாலையின் பணிப்பா ளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வின் பிரதம அதிதி யாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தோல் வைத்திய நிபுணர் என். தமிழ் வண்ணன் கலந்து சிறப்பித்தார்.

வரவேற்புரையினை தோல் நோய் மருத்துவர் ஜே.எச்.மஷ ாகிட் வழங்கியதோடு விசேட உரையினை வைத்தியசாலை யின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் வழங்கினார்.

தோல் வைத்திய நிபுணர் என். தமிழ்வண்ணனினால் தொழுநோய் பற்றிய விழிப்பு ணர்வு விளக்கவுரை நிகழ்த்தப் பட்டது.

(அ)

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 16 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா

அம்பாறை, பெப். 02

தென்கிழக்குப் பல்கலைக்க ழகத்தின் 16ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா, பல்கலைக் கழக ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெற வுள்ளதாக, தென்கிழக்கு பல்க லைக்கழகத்தின் பதில் பதிவா ளர் எம்.ஐ. நௌபர் தெரிவித் துள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்த ரணி பாயிஸ் முஸ்தபா தலை மையில் இரண்டு நாட்களும் தலா 3 அமர்வுகளாக மொத்த மாக ஆறு அமர்வுகளாக இந்த பட்டமளிப்பு நடைபெறவுள்ள தாக அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

முதலாவது நாளின் முதலா வது அமர்வில் கலை கலாசார பீடத்தினைச் சேர்ந்த 342 மாண வர்களும், இரண்டாவது அமர் வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடங்களைச் சேர்ந்த 355 மாணவர்களுக்கும், மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த 430 மாணவர்களுக்கும் பட் டங்கள் வழங்கப்படவுள்ளன.

இரண்டாம் நாள் நான்கா வது அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தைச் சேர்ந்த 314 பட்டதாரிகளுக்கும், ஐந்தாவது அமர்வில் கலை கலாசார பீடங் களைச் சேர்ந்த வெளிவாரி பட்டதாரிகள் 350 பேருக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் ஆறாவது அமர்வில் கலை கலாசார மற்றும் முகா மைத்துவ பீடங்களைச் சேர்ந்த வெளிவாரி பட்டதாரிகள் 361 பேருக்கும், 1414 உள்வாரி பட் டதாரிகளும், 711 வெளிவாரி பட்டதாரிகளுக்குமாக மொத் தம் 2152 பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன -என்றார்.

(அ)

# செங்கடல் நெருக்கடி நிலைமை முடிவுக்கு வரும் சாத்தியமில்லை

## வர்த்தக கப்பல்கள் ஆபிரிக்காவை சுற்றி செல்வதால் செலவுகள் அதிகரிப்பு

**பேர்லின், பெப். 02**

**மத்திய கிழக்கின் செங்கடல் பகுதியில் யேமன் ஹவுதி போராளிகள் நடத்தும் தாக்குதல்கள் தொடர்பான நெருக்கடி நிலைமை முடிவுக்கு வரும் அறிகுறிகள் தென்படவில்லை என சர்வதேச கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.**




பலஸ்தீனத்தின் காஸா மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களைக் கண்டித்து அதற்கு பதில் தாக்குதல் நடத்தும் நோக்கில் ஈரானின் ஆதரவைப் பெற்ற ஹவுதி போராளிகள் செங்கடல் வழியாக செல்லும் சரக்கு கப்பல்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், செங்கடலில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடிநிலை தற்போதைக்கு முடிவுக்கு வருவதாக தெரியவில்லை என வர்த்தக கப்பல் நிறுவனமான ஜேர்மனியின் ஹாபக்-லோய்ட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ரோல்ஃப் ஹேபன் ஜென்சன் ஹம்பேர்க் நகரில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

எனினும் செங்கடல் வழியாக செல்லும் வர்த்தக சரக்குக் கப்பல்களை பாதுகாக்க அரசியல் ரீதியிலான உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டு, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் இந்த நெருக்கடி நிலைமை ஆறு மாதங்களுக்குள் முடிவுக்குக் கொண்டு வரும் சாத்தியம் இருப்பதாக ஹேபன் குறிப்பிட்டுள்ளார்.

ஹாபக்-லோய்ட் உலகில் ஐந்தாவது மிகப் பெரிய சரக்குக் கப்பல் நிறுவனமாகும்.

செங்கடலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாக ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான வர்த்தக கப்பல்களை போல் இந்த நிறுவனத்தின் வர்த்தக கப்பல்களும் வேறு பயணப் பாதையை பயன்படுத்தி வருகின்றன.

வர்த்தக கப்பல்கள் சுயஸ் கால்வாய் வழியாக செல்லாமல் ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சுற்றி செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பயண நேரம் அதிகரித்துள்ளதுடன் செலவுகளும் அதிகரித்துள்ளன.

(அ)

# தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் சுட்டுக்கொலை

## பாகிஸ்தானில் பரபரப்பு

*இஸ்லாமாபாத், பெப். 02*

பாகிஸ்தானில் எதிர் வரும் 8 ஆம் திகதி பொது தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அதில் போட்டியிடவிருந்த வேட்பாளர் ஒருவர் நேற்று முன் தினம் மர்ம நபர்களால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் எல்லை பகுதியில் உள்ள பஜார் என்ற பழங்குடியின மாவட்டத்தில் சுயேட்சை வேட்பாளராகக் களமிறங்கிய 'ரெஹான் ஜெப் கான்' என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை மர்ம நபர்கள்



நடத்திய தாக்குதலில் அவருடன் இருந்த 4 உதவியாளர்களும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 'ரெஹான் ஜெப் கானுக்கு முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் கட்சி ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


(அ)

# ரிக்ரொக்கிற்கு எதிராக 5,000 பெற்றோர் வழக்கு!

*நியூயோர்க், பெப். 02*

அமெரிக்காவில் 5,000 பெற்றோர் இணைந்து பிரபல சமூக ஊடகமான ரிக்ரொக்கிற்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

ரிக்ரொக் செயலியானது இளம் சமூகத்தினரை அழித்து வருவதாகக் குற்றம் சுமத்திய குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்




பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வழக்கானது அமெரிக்க மக்கள் மத்தியில் பெரும் பேசுபொருளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடும் கோபத்தில் உள்ள பிரான்ஸ் விவசாயிகள்!

## பாரிஸுக்கான அனைத்து வீதிகளும் முடக்கம்

*பாரிஸ், பெப். 02*

புதிய சுற்றுச்சூழல் விதிமுறைகள் மற்றும் அதிகரித்து வரும் எரிசக்தி செலவுகளுக்கு எதிரான பிரான்ஸ் விவசாயிகளின் வீதி மறியல் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன்படி, தென்மேற்கு பிரான்ஸில் துலூஸ் விமான நிலையத்திற்கு செல்லும் வழியை தடுக்கும் வகையில் வைக்கோல் முட்டைகளை எரித்து விவசாயிகள் போராட்டத்தில் நேற்று முன் தினம் ஈடுபட்டனர்.

அத்துடன், பாரிஸுக்கு செல்லும் வழிகளில் டிராக்டர்களை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டதுடன் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், என்ன நடந்தாலும் போராட்டத்திடம் முடிவுக்கு கொண்டுவரப்படமாட்டாது என்பதில் தாம் உறுதியாக இருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தில் 'விவசாயத்தை காப்போம்' எனும் பதாதைகளை காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இந்தப் போராட்டங்கள் ஏனைய ஐரோப்பிய நாடுகள் மற்றும் அரசியல்வாதிகளின் கவனத்தை ஈர்க்கும் என விவசாயிகள் நம்



பிக்கை கொண்டுள்ளனர்.

பிரான்ஸ் அரசாங்கத்தின் தீர்மானங்களினால் கடுமையாக கோபமடைந்துள்ள விவசாயிகள் பெல்ஜியத்தில் உள்ள சைபுருகா கொள்கலன் முனையத்திற்கான வீதிகளை முற்றுக்கடுவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

எதிர்ப்புக்கள் அதிகரித்து வருவதையிட்டு எச்சரிக்கையடைந்த பிரான்ஸ் அரசாங்கம், ஐரோப்பிய தேர்தல்களைக் கருத்தில் கொண்டு, விவசாய எரிபொருள் மீதான மானியங்களை படிப்படியாகக் குறைக்கும் திட்டங்களை ஏற்கனவே கைவிட்டுள்ளதுடன், சுற்றுச்சூழல் விதிமுறைகளை எளிதாக்குவதாக உறுதியளித்துள்ளது.

அத்துடன், தரிசு நிலங்கள் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் மற்றும் தலைவர்களுடன் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் கலந்துரையாட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# உக்ரைனின் தலைமைத் தளபதியை பதவிநீக்கும் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி?

*கீவ், பெப். 02*


உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, உக்ரைனிய தலைமை தளபதி வலேரி ஜலுஷ்னியை பதவி நீக்கம் செய்ய உள்ளதாகக் கூறப்படுகிறது. இரு தலைவர்களுக்கும் இடையே பிளவு ஏற்படக் கூடும் என்று பல வாரங்களாக ஊகிக்கப்பட்ட நிலையில், பதவிநிக்கப்படலாம் என்ற செய்தியை ஜனவரி 31 அன்று பெயரிடப்படாத ஆதாரங்களை மேற்கோள் காட்டி சி.என்.என் செய்தி வெளியிட்டது.

அறிக்கைகளின்படி, ஜனவரி 30 அன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு ஜலுஷ்னி அழைக்கப்பட்டு, அவர் நீக்கப்படுவதாகக் குறிப்பிடப்ட்டுள்ளது.

அதிகாரபூர்வ ஜனாதிபதி ஆணை எதுவும் வெளியிடப்படவில்லை. ஜனவரி 31 வரை ஜலுஷ்னி இன்னும் அதிகாரப்பூர்வமாக பதவியில் இருந்தார். சி.என்.என் அவரது பணிநீக்கம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வார இறுதியில் எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கிறது.

ஜலுஷ்னி ஜூலை 2021 முதல் தலைமை தளபதியாக பணியாற்றினார். நவம்பர் 2023 இல் ஜெலென்ஸ்கி மற்றும் ஜலுஷ்னி இடையே கருத்து வேறுபாடுகள் பற்றிய அறிக்கைகள் முதலில் வெளிவந்தன.

நவம்பர் 1 அன்று தி எக்கனமிஸ்ட் பத்திரிகைக்கு போர் நிலவரம் குறித்து ஜலுஷ்னிஅளித்த பேட்டியைத் தொடர்ந்து இருவருக்கும் இடையே கூறப்படும் கருத்து வேறுபாடு அதிக கவனத்தைப் பெற்றது, அதில் உக்ரைன் நீடித்த போரின் பொறிக்குள் செல்லும் அபாயம் இருப்பதாக அவர் கூறினார்.



நவம்பர் 4 அன்று நடந்த மாநாட்டின் போது இந்த உணர்வுடன் உடன்படவில்லை என்று ஜெலென்ஸ்கி கூறினார்.

ஜனாதிபதி ஜெலென்ஸ்கி சில இராணுவத் தளபதிகளுடன் நேரடியாகவே தொடர்பு கொண்டு பேசுகிறார், ஜலுஷ்னியை "புறக்கணிக்கிறார்" என்று அநாமதேய ஆதாரங்களை மேற்கோள் காட்டி உக்ரைனிய ஊடகங்கள் கடந்த மாத நடுப்பகுதியில் கூறியிருந்தன.

இராணுவ, விமானப்படை தளபதிகளுடன் நேரடியாக பேசி கட்டளைகள் வழங்குகிறார், ஜலுஷ்னிக்கு தெரியாமல் பல நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என குறிப்பிட்டிருந்தன.

ஜனாதிபதி ஜெலென்ஸ்கி டிசம்பர் 19 அன்று செய்தியாளர் சந்திப்பின் போது, தளபதி ஜெனரல் ஜலுஷ்னி உடன் "பணிபுரியும் உறவு" இருப்பதாகக் கூறினார்.

தலைமை தளபதியின் நீக்கத்தின் பின்னணியில் 2 காரணங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது.

ரஷ்ய படைகள் மீது பெரும் பிரச்சாரத்துடன் உக்ரைன் ஆரம்பித்த எதிர்தாக்குதல் தோல்வியுற்றது. ஜெலென்ஸ்கியின் ஜனாதிபதி பதவிக்காலம் அடுத்த ஆண்டு முடிவடைகிறது. இராணுவச் சட்டம் காரணமாக தேர்தல்கள் தொழில்நுட்ப ரீதியாக ஒத்திவைக்கப்பட்டாலும், அவற்றின் சாத்தியம் குறைவாகவே உள்ளது.

ஜெலென்ஸ்கி மற்றும் ஜலுஷ்னி இடையே உள்ள முரண்பாடு, வரவிருக்கும் ஆண்டின் நிச்சயமற்ற தன்மையை அதிகரிக்கிறது மற்றும் நாட்டின் ஒற்றுமையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. தற்போதைய நிலைமையில் ஜெலன்ஸ்கிக்கு சாத்தியமான எதிர்போட்டியாளர் இல்லாத நிலையில், ஜலுஷ்னிக்கு பொதுமக்கள் மத்தியில் உருவாகியுள்ள ஹீரோ இமேஜ், தனது அரசியல் எதிர்காலத்துக்கு ஆபத்தாக அமையும் என அஞ்சுவதால் பதவிநீக்கியிருப்பதாக சொல்லப்படுகிறது.

(அ)

# சுதந்திரதின நிகழ்வுக்கான ஒத்திகையில் முரண்பாடு!

## ஏற்பாட்டு குழுவுடன் திடீர் பேச்சுவார்த்தை

கொழும்பு, பெப். 02

**தேசிய சுதந்திர தின நிகழ்வுக்காக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒத்திகையின் போது ஏற்பட்ட கருத்து முரண் பாடான சம்பவம் காரணமாக அதில் கலந்துகொண்டிருந்த பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸ் திணைக்களத்துடன் தொடர்புடைய அனைவரும் பயிற்சிகளில் இருந்து விலகிக்கொண்டுள்ளனர்.**

சம்பிரதாயபூர்வமாக சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தரும் ஜனாதிபதியின் வாகனத்தின் இரு புறங்களிலும் செல்ல பொலிஸ் குதிரைப்படையை நீக்கிவிட்டு, இராணுவ மோட்டார் சைக்கிள் படைப்பிரிவை சேர்த்தமையால் ஏற்பட்ட சிக்கலான சூழல் காரணமாக இந்த நிலைமை யேற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக சுதந்திர தின நிகழ்வுக்கான ஏற்பாட்டு குழுவுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட இணக்கத்திற்கு பின்னர் பொலிஸ் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரும் மீண்டும் ஒத்திகையில் ஈடுபட்டனர்.

சுதந்திர தின பேரணியில் பொலிஸார், விசேட அதிரடிப் படையின் மோட்டார் சைக்கிள் பிரிவினர், குதிரைப்படை, இசைக்குழு, விசேட அதிரடிப் படையின் தாக்குதல் பிரிவு என்பன கலந்துக்கொள்ள உள்ளன.

சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்ளும் முக்கிய பிரமுகர்களின் வாகனங்களுக்கு முன்னால் பொலிஸ் குதிரைப் படையினர் பயணிப்பது நீண்ட காலமாக இருந்து வரும் சம்பிரதாயம்.

இம்முறை இந்த பழக்கத்தை மாற்றியதால், கருத்து முரண்பாடான நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாகவே சுதந்திர தின ஒத்திகையில் ஈடுபட்ட பொலிஸ் திணைக்களத்தை சேர்ந்த அனைவரும் விலகி கொண்டனர்.

இதன் பின்னர் மேலதிடத்தில் இருந்த கிடைத்த உத்தரவுக்கு அமைய சம்பிரதாயபூர்வமான முறையில் ஒத்திகைகள் நடைபெற்றதுடன் பொலிஸ் திணைக்களத்தை சேர்ந்தவர்கள் அவற்றில் கலந்துக்கொண்டனர். (அ)

# இளைஞனை கடுமையாக தாக்கி காலை முறித்தனரா பொலிஸார்?



யாழ்ப்பாணம், பெப். 02

இளைஞரைத் தாக்கி அவரது காலை முறித்துள்ளதாக, அச்சுவேலி பொலிஸ் அதிகாரிகள் இருவர் மீது முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து பாதிக்கப்பட்ட இளைஞன் வழங்கியுள்ள முறைப்பாட்டில்-

நான் சைக்கிளில் புத்தூருக்கு சென்று கொண்டிருந்தபோது சிவில் உடையில் மோட்டார் சைக்கிளில் வந்த அச்சுவேலி பொலிஸார் என்னை நிற்குமாறு கூறினர்.

நான், ஏன் எனக் கேட்ட போது எனது முகத்தில் தாக்கி விட்டு ஏன் விசாரணைக்காக பொலிஸ் நிலையம் வரவில்லை எனக் கேட்டார்கள். அப்போது நான் காய்ச்சல் காரணமாக வர வில்லை எனத் தெரிவிக்க மீண்டும் என்னை தாக்கினார்கள். நான் கீழே விழுந்த நிலையில் மீண்டும் என்னைக் கடுமையாகத் தாக்கிவிட்டு என்னை வீசி விட்டுச் சென்றுவிட்டார்கள்.

இதனையடுத்து வீதியால் சென்றவர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு வந்தேன். தற்போது எனது ஒரு கால் முறிந்துள்ளது. என்னை தாக்கிய பொலிஸார் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்-என குறிப்பிட்டுள்ளார். (அ)

# போதை மாத்திரைகளுடன் 26 வயது இளைஞன் கைது!



கொழும்பு, பெப். 02

தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளை விற்பனை செய்யும் நோக்குடன் உடைமையில் வைத்திருந்த ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாநகர எல்லையில் வைத்து 26 வயதுடைய ஒருவரே நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரேமதிலக தலைமையிலான குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (அ)

# நாம் எப்போதும் சிங்கங்கள் பன்றிகளுடன் கூட்டு இல்லை!

## விமல் வீரவன்ஸ கூறுகிறார்

கொழும்பு, பெப். 02

"சிங்கங்கள் பன்றி பண்ணைக்குள் செல்லாது, எனவே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அமையும் புதிய கூட்டணியில் நாம் இணையமாட்டோம்." - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்க ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தமை குறித்தும், மைத்திரிபால சிறிசேன தரப்பால் உருவாக்கப்பட்டுவரும் புதிய கூட்டணி குறித்தும் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



"மைத்திரிபால சிறிசேன அரசியல் ரீதியில் பொய்யர், அவருடன் கூட்டு அரசியல் பயணத்துக்கு தயாரில்லை. பன்றிகள்தான் பன்றி பண்ணைக்குள் செல்லும், மாடுகள் மாட்டு தொழுவங்களுக்குள் செல்லும். நாம் சிங்கங்கள் இழு நிலைக்கு விழமாட்டோம். சிலவேளை எமது பக்கம் உள்ள சில பன்றிகள் அவற்றின் பன்னை நோக்கி செல்லக்கூடும்." எனவும் விமல் வீரவன்ச கூறினார்.

அதேவேளை, எட்கா மட்டுமல்ல எம்சிசி உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கான பேச்சுகளும் இடம்பெறுகின்றன. இவை தொடர்பில் நாட்டில் உள்ள முற்போக்கு சக்திகள் குரல் எழுப்பாமை கவலையளிக்கின்றது." -எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பேராதனை பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு

கொழும்பு, பெப். 02

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நேற்று முன் தினம் புதன்கிழமை முதல் வகுப்பு பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளனர்.

இது குறித்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சங்கச் செயலாளர் சசிந்த பண்டார விடுத்துள்ள அறிக்கையில்-

வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிக்க முடியாத நிலையில் உடனடியாக 'வற்' வரியை குறைக்கவேண்டும். உணவுப் பொருட்களுக்கான விலையேற்றம் காரணமாக பலர் சிரமப்படுகின்றனர்.

விலையேற்றத்தை உடன் குறைக்கவேண்டும். சிற்றுண்டிச்சாலைகளின் வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். புதிய மாணவர் விடுதிகள் அமைக்கப்பட வேண்டும்.

பயங்கரவாத தடுப்புச்சட்டம், நிகழ் நிலை காப்புச்சட்டம், சமூக கவளைத்தளங்களை கட்டுப்படுத்தும் சட்டம் போன்ற அண்மைகாலமாகக் கொண்டு வரப்பட்ட அனைத்து புதிய சட்டங்களையும் மீளப் பெற்று, கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை உறுதிப்படுத்தவேண்டும்.

மகாப் பொல பாக்கிப் பணம் செலுத்தப்பட வேண்டும். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் போன்றவர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

நியாயமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் வகுப்புத் தடைகள் நீக்கப்படவேண்டும்.

சி.சி.டி.வி. களைப் பொருத்தி அதன் மூலம் மாணவர்களது நடவடிக்கைகளை உளவு பார்க்கும் நிலை நீக்கப்பட வேண்டும்.

இலவச கல்வி, இலவச சுகாதாரம் போன்ற துறைகளை ஒழிக்கும் தனியார் கல்விக்கடைகளை உருவாக்கும் திட்டங்களைக் கைவிடவேண்டும்.

கல்விக்கான அரச நிதி 6 சதவீதமாக ஒதுக்கப்பட வேண்டும் முதலான பல்வேறு காரணங்களை முன் வைத்து தாம் விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பதாக எழுத்து மூலம் உபவேந்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது-என்றுள்ளது. (அ)

# நாடளாவிய ரீதியில் 878 பேர் கைது

கொழும்பு, பெப். 02

நாடளாவிய ரீதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் விசேட நடவடிக்கையில் 878 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட 649 சந்தேக நபர்களும், தேடப்படும் குற்றவாளிகள் பட்டியலில் இருந்த 229 பேரும் அடங்கின்றனர்.

அத்துடன், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் விசேட பணியகத்தின் பட்டியலில் இருந்த 15 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இதன்போது 130

MINISTRY OF DEFENCE

கிராம் ஹெரோயின் 134 கிராம் ஐஸ் போதைப்பொருள், ஒரு கிலோ மற்றும் 200 கிராம் கஞ்சா போதைப்பொருள், 136 கிராம் மாவா போதைப்பொருள், ஒரு கிலோ மற்றும் 100 கிராம் மதன மோதகம், 2,211 போதைப் மாத்திரைகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பணிப்புறக்கணிப்பு...

இராணுவத்தினரின் பங்களிப்புடன் மருத்துவ சேவைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்தப் பணியில் சுமார் 600 இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் -12இல்)

## ஜனாதிபதி...

நபர் ஒருவரை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொட்டதெனிய பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பேச்சாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிபவர் என்றும் அவர் கூறினார். (ஐ)

## பேருந்து...

தலைவர் சஷி வெல்கம தெரிவித்துள்ளார்.

நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒட்டோ டீசல் 5 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்புக்கு அமைவாக பேருந்து கட்டணம் அதிகரிக்குமா என்ற கேள்விகள் எழுந்த நிலையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தலைவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேவேளை, பாடசாலை வானுக்கான கட்டணம் 10 - 15 வீதம் வரை உயர்ந்துள்ளது. எனினும், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம் என்பன கட்டண அதிகரிப்பில் தற்போதைக்கு மாற்றமில்லை என்று அறிவித்துள்ளன. (ஐ)

## நிகழ்நிலை...

ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஓர் ஆணைக்குழு உருவாக்கப்படும். இந்த ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படும் ஐவர் குழுவின் பதவிக்காலம் மூன்று வருடமாக இருக்கும். இந்த சட்டமூலம் தொடர்பான விடயங்களை இந்த ஆணைக்குழுவே கையாளும்.

இந்த சட்டத்தின் கீழ், நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக பொய்யான தகவல்களை பகிர்தல், நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலான கருத்துகளை வெளிப்படுத்துதல், கலகங்களை ஏற்படுத்துவதற்காக பொய்யான தகவல்களை பரப்புதல் - மக்களை தூண்டுதல், மத உணர்வுகளை புண்படுத்தும் உள்நோக்கத்துடன் போலி செய்திகளை பகிர்தல், ஆள் மாறாட்டம் மூலமான மோசடி, கலகம் ஏற்படுத்துதல் அல்லது அரசாங்கத்துக்கு எதிராக உள்நோக்கத்துடன் பொய்யான அறிவிப்புகளை பரப்புதல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பணிப்புரையை மறுத்தல் போன்றவை குற்றங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குற்றங்கள் திட்டமிடப்பட்டு - உள்நோக்கத்துடன் செய்யப்பட்டவை என்று நிரூபணமாகும் பட்சத்தில் குற்றவாளிக்கு 5 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட முடியும்.

இதேசமயம், இந்த சட்டமூலம் ஊடக சுதந்திரத்துக்கு பெரும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான பயங்கரவாத தடை சட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் இட்டுள்ள அடித்தளம் என்று ஊடக, சிவில் அமைப்புகள் விமர்சித்துள்ளன.

எனினும், இணையம் மூலம் இடம்பெறும் பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களை இந்தச் சட்டம் கட்டுப்படுத்தும் என்றும் ஒரு சாரார் வரவேற்றுள்ளனர்.

இதேநேரம், இந்த சட்டம் குறித்து உயர்நீதிமன்றம் செய்த 34 பரிந்துரைகளை அரசாங்கம் செய்யவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழரசின்...

குகதாசன் உள்ளிட்ட புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

பொதுச் செயலர் விடயத்தில் குழப்பம் ஏற்பட்ட நிலையில், பொதுக் குழுவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் குகதாசன் பொதுச் செயலராக 12 மேலதிக வாக்குகளால் உறுதிப்படுத்தப்பட்டார். எனினும், வாக்கெடுப்பு நடத்தப்பட்ட விதம் - நடத்தப்பட்ட முறை மற்றும் பலர் வெளியேறிய நிலையில் நடத்தப்பட்டது என்று கூறி சர்ச்சை எழுந்த நிலையில் கட்சியின் தேசிய மாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா (தற்போதும் உத்தியோகபூர்வ தலைவர் இவரே), புதிய தலைவராக தெரிவான சிறிதரன் ஆகியோர் புதிய நிர்வாகத்தை கிடப்பில் பேணுவது என்று முடிவு செய்தனர். அத்துடன், சிங்கப்பூர் செல்லும் மாவை சேனாதிராசா எதிர்வரும் 10ஆம் திகதி நாடு திரும்புகிறார். அதன் பின்னர் தமிழ் அரசு கட்சியின் மத்திய செயல் குழுவை கூட்டுவது என்று தீர்மானித்திருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெவ்வேறு...

த. சுரேஸ் ஆகியோர் நீதிமன்ற தடையை மீறினர் என்று வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் நீதிமன்றில் முன்னிலையான பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த 1987ஆம், 1991ஆம் ஆண்டு கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்ட 152 பேருக்காக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் ஜனவரி 28ஆம் திகதி வருடா வருடம் நினைவு கூருவது வழக்கம்.

2022 ஜனவரி 28 வழமை போல நானும் எனது கட்சி உறுப்பினர்கள் உட்பட பலர் சென்று நினைவேந்தலுக்கு விளக்கேற்றினோம். எந்தவிதமான தடை உத்தரவும் கிடைத்திருக்கவில்லை.

அதன் பின்னர், எனக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸுக்கும் பொலிஸார் நீதிமன்ற தடை உத்தரவு வழங்கினர். 2021, 2022, 2023, 2024 விளக்கேற்றினோம். எந்த விதமான பிரச்னையும் இல்லை. ஆனால், 2022ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த காலத்தில், அவரின் உத்தரவின் பெயரில் தடை உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

இந்த நாடு ஜனநாயக நாடு. இந்த நாட்டிலே ஒரு சட்டம் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த நாட்டை ஆள வருகின்ற ஆட்சியாளர்கள், அரச அதிபர்கள் தாங்கள் நினைத்ததையே சட்டமாக கொண்டு நடத்துவதுதான் ஒரு முறையாக இருக்கிறது.

இந்த நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றதா? அல்லது ஒரே நாடு என்ற சட்ட முறை இருக்கின்றதா? என்பதை நாட்டு மக்கள் உணர வேண்டும்.

வடக்கு, கிழக்கில் இறந்தவர்களுக்கு நாங்கள் நினைவுகூர, விளக்கேற்ற முடியாது எனக்கூறினால், தெற்கில் இந்த நாட்டில் பெரும் கிளர்ச்சி ஏற்படுத்திய ஜே. வி. பி. தங்களின் தலைவர்கள் மற்றும் மரணித்தவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் சிலை வைத்து நினைவுகூரலாம் என்றால் ஏன் வடக்கு, கிழக்கில் இப்படியான தடைகள் இருக்கின்றன.

ஒரே நாட்டில் ஒரே சட்டத்தை பேணி பாதுகாக்க முடியாவிட்டால் ஒரே நாடு தேவையில்லை. அந்த நிலைமைக்கு நீங்கள் எங்களை தள்ளிவிடுகின்றீர்கள். தெற்கிலே நடைபெறுவது வடக்கு - கிழக்கில் நடைபெற வேண்டும். ஒரே நாடு ஒரே சட்டமாக இருந்தால் இப்படியான தொந்தரவுகளை கொடுக்கக்கூடாது - என்றும் கூறினார். (ஐ)

# ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பில் விளக்கி அறிக்கை!

கொழும்பு, பெப். 02

பொலிஸ்மா அதிபரின் நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு அரசமைப்பு பேரவை மற்றும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பில் விடயங்களை தெளிவுபடுத்தி ஜனாதிபதி ஊடகப் பிரிவு ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

"ஜனாதிபதி மற்றும் அரசமைப்பு பேரவையின் அரசமைப்பு ரீதியான பொறுப்பை நிறைவேற்றுதல்" என்ற தலைப்பில் இந்த ஊடக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் மூலம் நிறுவப்பட்ட பாராளுமன்றத்தில் சபாநாயகர் தலைமையிலான அரசமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியாக செயல்படுவதாகவும், ஜனாதிபதி அரசமைப்புக்கு அமைவான பணிகளை முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்பையும் அரசமைப்பு பேரவை வழங்குவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தனது அரசமைப்புக்கு அமைவான பணிகளை முன்னெடுப்பதற்கு செய்யப்படும் எந்தவோர் இடையூறுகளும் அரசமைப்பு மீறலாகவே கருதப்படும் எனவும், ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"அரசமைப்பின் 4(ஆ) உறுப்புரையின் கீழ் இலங்கை ஜனநாயக குடியரசின் ஜனாதிபதி, நாட்டின் தேசிய பாதுகாப்பு உட்பட மக்களின் நிறைவேற்று அதிகாரத்தை செயல்படுத்துகிறார். இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பான அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, நிறைவேற்று அதிகாரத்தின் பிரதானி என்ற வகையில், அரசமைப்பில் குறிக்கப்பட்டுள்ள நடைமுறைக்கு அமையவும் ஜனாதிபதியின் அரசமைப்பு ரீதியான பொறுப்பிற்கு அமையவும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட உயர் அரசாங்க பதவிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கு அரசமைப்பு ரீதியாக ஜனாதிபதி கடமைப்பட்டுள்ளார்.

எனவே, ஜனாதிபதி தனது அரசமைப்பு ரீதியான கடமைகளை எந்தவித இடையூறும் அல்லது தடைகளும் இன்றி செய்ய வேண்டும். அரசமைப்பின் 41(ஈ) உறுப்புரையின் கீழ், பொலிஸ்மா அதிபரின் நியமனம், ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட சிபாரிசுக்கு அரசமைப்புப் பேரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னரே மேற்கொள்ளப்படுகிறது.

ஜனாதிபதியின் அரசமைப்புக்கு அமைவான பணிகளை முன்னெடுப்பதற்கு செய்யப்படும் எந்தவொரு இடையூறுகளும் அரசமைப்பு மீறலாகவே கருதப்படும். ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அரசமைப்புக்கு முரணாக தனது அதிகாரங்களைப் பயன்படுத்தினால், அதற்கான நடவடிக்கைகளும் அரசமைப்பிலேயே வழங்கப்பட்டுள்ளன." என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கரிநாள் போராட்டம் முன்னணி ஆதரவு!

யாழ்ப்பாணம், பெப். 02

இலங்கையின் சுதந்திர நாளான - பெப்ரவரி 4ஆம் நாளை கரிநாளாக பிரகடனப்படுத்தியமை மற்றும் அன்றைய தினம் (நாளை மறுதினம்) கிளிநொச்சியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் பேரணிக்கு தமது ஆதரவை வழங்குவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில்,

பெப்ரவரி 4ஆம் நாள், 76 வருடங்களுக்கு முன்னர் தமிழர் தேசத்தின் இறைமையை பிரித்தானியரிடமிருந்து கைகப்படுத்திய சிங்கள - பௌத்த பேரினவாதம், தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்தை சூறையாடிய கறுப்பு நாளாகும்.

முழுத் தீவினதும் ஆட்சி அதிகாரத்தை தனது கையில் வைத்துக் கொண்டு, தமிழர் நிலங்களை ஆக்கிரமித்தும் தமிழ் இனவழிப்பை மேற்கொண்டும், தமிழர் தேசம் மீதான திட்டமிட்ட சிங்கள-பௌத்த ஆக்கிரமிப்புக்கள், அதன் தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பையும் சிங்கள - பௌத்த பேரினவாதம் தொடர்ந்து வருகிறது.

அந்தவகையில் - பெப்ரவரி 4ஆம் நாள் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கிளிநொச்சியில் நடத்தவுள்ள பேரணிக்கு எமது ஆதரவை தெரிவிக்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## இலங்கை...

தனியார் சட்டத்தரணிகளின் சேவையை பெறுவதற்கு அரசாங்கப் பணத்தை செலவிட்டால், அந்த பணத்தை உரிய அதிகாரியிடமிருந்து தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியியல் சங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், கடந்த வருடத்தில் பெரும்பாலான வழக்குகளில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சேவைகளை பெற்றுக்கொள்ளாமல், தனியார் சட்டத்தரணிகளின் சேவையை சபை பெற்றுக்கொண்டுள்ளதாக பொறியியலாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மின்சார சபை, 13 கோடி ரூபாய்க்கும் அதிக தொகையை சட்டத்தரணி கட்டணமாக செலுத்தியுள்ளது.

இந்த தொகையானது 2015 மற்றும் 2021-க்கு இடைப்பட்ட 6 ஆண்டு காலப்பகுதியில், சட்டக் கட்டணத்திற்கு செலவளிக்கப்பட்ட மொத்த செலவை விட அதிகமானது என பொறியியலாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையின் தலைவர் என். எஸ். இலங்ககோனிடம் வினவியபோது, அமைச்சரவையின் தீர்மானத்துக்கு அமைய தனியார் சட்டத்தரணிகளின் சேவைகள் பெறப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய, தனியார் சட்டத்தரணிகளின் சேவைகள் பெறப்பட்டால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையே அங்கு பின்பற்றப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## யாழ்ப்பாணம்...

புதிய ஈரநில வலயங்களாக பிரகடனப்படுத்த வனஜீவராசிகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

வங்காலை சரணாலயமே விடத்தல் தீவு இயற்கை சரணாலயமாக விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## மாணவருக்கு...

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வு மற்றும் கல்வி செயல்திறனுக்கு பங்களிக்கும் - என்றார்.

இதேவேளை, எதிர்வரும் கல்வியாண்டுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2024 கல்வி ஆண்டுக்கு தேவையான அனைத்துப் பாடசாலை பாடப் புத்தகங்களும் அச்சிடப்பட்டு விநியோகத்துக்குத் தயாராக உள்ளன. மூன்றாம் தவணை முடிவடைந்தவுடன் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள் உடனடியாக வழங்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இணையவழிக் காப்புச் சட்டம் பொருளாதார மீட்சிக்கு ஆபத்து

## அமெரிக்கத் தூதுவர் எச்சரிக்கை



கொழும்பு, பெப். 02

**இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் பொருளாதார மீட்சியை நோக்கிப் பயணிக்கும் இலங்கைக்கு எதிர்மறையான சமிக்ஞையை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார். இணைய வழி பாதுகாப்பு உத்தேசச் சட்டம் இணையவழிக் குற்றங்களை ஒடுக்குவதற்கு உருவாக்கப்பட்டாலும் அது நாட்டின் ஜனநாயகத்தை ஒடுக்குவதாகவே அமைந்துள்ளதாக சர்வதேச தொழில்நுட்ப நிறுவனங்கள் குறிப்பிடுவதாகவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

இலங்கையில் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கான சூழ்நிலையை முன்னேற்றகரமானதாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் அதே வேளை, இந்த சீர்திருத்தங்கள் குறித்து மக்கள் தெளிவாக அறிவிக்கவேண்டும் என்றும் அமெரிக்க தூதுவர் வலியுறுத்தினார்.

இலங்கை அரசாங்கம் சீர்திருத்தங்களை முன்னெடுப்பது மிகவும் அவசியமானது என தெரிவித்த அவர், சட்டமூலங்களை தாமதமாக அமுல்படுத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலம் தொடர்பான விளங்கங்களை சட்டம் நிறைவேற்றுவதற்கு முன்னர் 70 சதவீதமான மக்கள் அறிந்திருக்கவில்லை என்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் மேலும் கூறினார். (அ)

# வடதாரகை திருத்தப் பணிக்கு 32 இலட்சம் ரூபாய் செலவாகும்!

யாழ்ப்பாணம், பெப். 02

குறிகாட்டுவான் - நெடுந்தீவுக்கு இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் 'வடதாரகை படகினை திருத்தம் செய்வதற்கு 32 இலட்ச ரூபாய் செலவாகும் என கடற்படை தெரிவித்துள்ளது.

கச்சதீவு திருவிழாவுக்கு முன்னர் வடதாரகை படகைத் திருத்தம் செய்யமாறு யாழ்.மாவட்ட செயலர் அறிவுறுத்தியிருந்தார்.

இதனையடுத்து வடதாரகை படகின் திருத்த வேலைக்கான மதிப்பீட்டை மேற்கொண்ட கடற்படையினர், திருத்தப் பணிகளுக்காக 32 இலட்ச ரூபாய் செலவாகும் எனவும், பழுதுகள் காணப்பட்டால் அவற்றினை திருத்தம் செய்வதற்கு மேலதிக பணம் தேவைப்படும் எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, குறிகாட்டுவான்-நெடுந்தீவு இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் குமுதினி படகு நேற்று முதல் சேவையில் ஈடுபடும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது. (அ)

# திருகேதீஸ்வரம் ஆலயத்தின் சிவராத்திரி குறித்து ஆராய்வு

மன்னார், பெப். 02

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருகேதீஸ்வரம் ஆலயத்தின் மகா சிவராத்திரி விழா தொடர்பாக முன்னாயத்த கூட்டம் நேற்று முன் தினம் மாலை மன்னார் மாவட்ட செயலக பழைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் திருகேதீஸ்வர ஆலய தலைவர், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) , மன்னார் நகரப் பிரதேச செயலாளர், அரசாங்க உயர் அதிகாரிகள், இராணுவ மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர்கள், மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள மகா சிவராத்திரி விழா மற்றும் அன்றையதினம் ஆலயத்துக்கு வருகை தரவுள்ள பல இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பது தொடர்பான பல்வேறு விடயங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் முக்கிய முடிவுகள் நிறைவேற்றப்பட்டன.

விசேட பஸ் சேவை நடத்துதல், உணவு வசதிகளை வழங்குதல், குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை பெற்றுக் கொடுத்தல், மருத்துவ வசதிகளை வழங்குதல், ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு பாதுகாப்பு வசதிகளை செய்துகொடுப்பது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. (அ)

# வைத்தியசாலை பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட இராணுவம்



கொழும்பு, பெப். 02

தேவைக்கு ஏற்ப மருத்துவமனைகளின் பணிகளுக்கு ஆதரவாக முப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளின் 72 சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து முன்னெடுக்கும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தினால் வைத்தியசாலை நடவடிக்கைகளை இடையூறு இன்றிப் பேணுவதற்குத் தேவைக்கேற்ப இராணுவத்தினரை அனுப்புமாறு பாதுகாப்பு அமைச்சிடம் சுகாதார அமைச்சு விடுத்த கோரிக்கையின் பிரகாரம், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேயின் அறிவுறுத்தலின்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, தற்போது மேற்கு, கிழக்கு, மத்திய மற்றும் வன்னி பாதுகாப்புப் படைத் தளபதிகளின் மேற்பார்வையில், கொழும்பு மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகள் களுபோவில, கராப்பிட்டி, மஹமோதர, பேராதனை, அனுராதபுரம் மற்றும் குருநாகல் போதனா வைத்தியசாலைகள் மற்றும் மாத்தறை, பலாங்கொடை, அஹலியகொட, நாவலப்பிட்டி, பதுளை, கம்பளை, கேகாலை , மீரிகம, ஹோமாகம உட்பட 26 வைத்தியசாலைகளின் அன்றாட நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

தற்போது, அந்த மருத்துவமனைகளின் தேவைக்கு ஏற்ப, ஏறக்குறைய 700 ராணுவ வீரர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவசரநிலை ஏற்பட்டால் கூடுதல் படையினரை அனுப்புவதற்கு தயார்படுத்துமாறும், தொழில்சார் நடவடிக்கைகள் காரணமாக பொதுமக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை எவ்வித இடையூறும் இன்றி மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே பாதுகாப்புப் படைத் தளபதிகளுக்கு மேலும் பணிப்புரை விடுத்துள்ளார்.



# திருகோணமலை வைத்தியசாலையில் ஊழியர்கள் நேற்று பணி பகிஷ்கரிப்பு

திருமலை, பெப். 02

திருகோணமலை பொது வைத்தியசாலை தாதியர்கள், சிற்றூழியர்கள், ஊழியர்கள், மருந்தாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

சம்பளம் அதிகரிப்பு, ஊழியர் பற்றாக் குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும், வாழ்வாதாரத்தினை அதிகரி போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் தூர இடங்களில் இருந்து வருகை தந்த நோயாளர்கள் மிகவும் அவதியுற்றதை காண முடிந்தது.

# இலங்கையை ஆண்ட இறுதி மன்னனின் நினைவு தினம் கண்டியில் அனுஷ்டிப்பு



கொழும்பு, பெப். 02

இலங்கையின் இறுதி மன்னரான கண்டி ராஜ்ஜியத்தை ஆண்ட ஸ்ரீவிக்ரம ராஜசிங்கனின் 192 நினைவு தினத்தை முன்னிட்டு, தானம் மற்றும் விசேட பூஜைகள் வர லாற்று சிறப்புமிக்க கண்டி ஸ்ரீநாத ஆலயத்தில் நடைபெற்றன.

இலங்கையை ஆட்சி செய்த இறுதி மன்னரான ஸ்ரீவிக்ரம ராஜசிங்கன் 1815 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்ட பின்னர் தமிழ் நாட்டின் வேலூருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்குள்ள கோட்டையில் சிறை வைக்கப்பட்டார்.

சிறையில் வைக்கப்பட்டிருந்த அவர் 1832 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி உயிரிழந்தார். அதனை நினைவுகூரும் வகையில் இந்த சமய நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் உறவு முறை பரம்பரையை சேர்ந்த தற்போது திருகோணமலை மற்றும் கண்டியில் வசித்து வரும், மோகன் பேரின்பநாயகம்,அருண் செல்வராஜ், என். சண்முகராஜா, ரமேஷ் சுப்ரமணியம்,என். ஞானேஸ்வரன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் உறவினர்கள் தமிழகத்தின் வேலூர் உள்ளிட்ட பிரதேசங்களிலும் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு





# இந்த உலகில் எனக்கான நேரம் முடிந்து விட்டதாக உணர்ந்தேன்!

## கார் விபத்து குறித்து ரிஷப் பந்த்

புதுடில்லி, பெப். 02

கார் விபத்தில் சிக்கியவுடன் இந்த உலகத்தில் தனக்கான நேரம் முடிந்துவிட்டதாகவும் இறந்து விடுவேன் என நினைத்தார் என்றும் இந்திய அணியின் ரிஷப் பந்த் தெரிவித்துள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ரிஷப் பந்த் கார் விபத்தில் சிக்கினார். அதில் பலத்த காயங்களுடன் உயிர்பிழைத்த ரிஷப் பந்த் தற்போது குணமடைந்து கிரிக்கெட் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இந்த ஆண்டு ஐ. பி. எல். தொடரில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியை வழிநடத்துவார் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், கார் விபத்து குறித்து அவர் கூறுகையில்,

கார் விபத்தில் சிக்கியபோது முதன்முறையாக இந்த உலகத்தில் எனக்கான நேரம் முடிந்துவிட்டதாக உணர்ந்தேன். விபத்து ஏற்பட்டபோது எனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து நான் அறிந்திருந்தேன். எனக்கு அதிர்ஷ்டம் இருந்ததால் பெரியளவில் பயப்படும் படியான அளவுக்கு ஒன்றும் ஆகவில்லை. யாரோ ஒருவர் என்னைக் காப்பாற்றியதாக உணர்ந்தேன். காயங்களிலிருந்து குணமடைய எவ்வளவு நாள்கள் ஆகும் எனக் கேட்டதற்கு, 16-18 மாதங்கள் ஆகும் என மருத்துவர் கூறிவிட்டார். காயத்திலிருந்து மீண்டு வரும் காலங்கள் கடினமாக இருக்கப்போகிறது எனத் தெரிந்தது - என்றார்.

# களம் திரும்புகிறார் வீனஸ் வில்லியம்ஸ்!



கலிபோர்னியா, பெப். 02

முன்னாள் முதல்நிலை வீராங்கனையும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 7 முறை சம்பியன் பட்டம் வென்றவருமான வீனஸ் வில்லியம்ஸ் மீண்டும் ரென்னிஸ் களம் திரும்புவதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த 43 வயதான அவர், கடந்த ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் தொடரில் முதல் சுற்றிலேயே அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார். அதன்பின் காயம் காரணமாக எந்தப் போட்டிகளிலும் பங்கேற்காமல் இருந்தார்.


காயத்திலிருந்து மீண்டு வரும் அவர் இந்த ஆண்டு நடைபெற உள்ள இந்தியன் வேல்ஸ் மற்றும் மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடர்களில் பங்கேற்பதை இலக்காக கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், “ நான் ரென்னிஸ் களத்துக்கு மீண்டும் திரும்புவேன். எனது காயங்கள் குறித்து விளக்க விரும்பவில்லை. ஏனெனில், தோல்விக்கு அதைக் காரணமாக கூறுவதை நான் வெறுக்கிறேன். இப்போதைக்கு என்னுடைய பெரிய இலக்கு இந்தியன் வேல்ஸ் மற்றும் மியாமி ஓப்பன் தொடர்களில் பங்கேற்பது மட்டுமே. அந்த தொடர்களில் கடந்த 3 வருடங்களாக நான் விளையாடவில்லை. மேலும் ரென்னிஸ் களத்தில் சாதிக்க எனக்கு நிறைய இலக்குகள் உள்ளன” - என்றார். (ஐ)

# ஷமாரின் வாழ்வை படித்தபோது எனது கண்களில் கண்ணீர் வந்தது!

## டி வில்லியர்ஸ்





ஜொகன்னர்ஸ்பேர்க், பெப். 02

ஷமார் ஜோசப்பின் வாழ்க்கை பயணத்தை பற்றி படிக்கும்போது எனது கண்களில் கண்ணீர் வந்தது. எளிமையாக சொல்ல வேண்டும் என்றால், அவரின் வாழ்க்கை வரலாறு ஊக்கமளிக்கும் - என்று கூறியுள்ளார் தென்னாபிரிக்க வீரர் டி வில்லியர்ஸ்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி அவுஸ்திரேலியா சென்று தொடரில் பங்கேற்றது. இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றன. இரண்டாவது டெஸ்ட் போட்டியை மேற்கிந்தியத் இந்தியத் தீவுகள் கைப்பற்றியது. இதில், மேற்கிந்திய வீரர் ஷமார் ஜோசப் 7 விக்கெட்கள் வீழ்த்தினார். இதன் மூலம், மேற்கிந்தியத் தீவுகள் அணி அவுஸ்திரேலிய மண்ணில் 27 ஆண்டுகளுக்குப் பிறகு அவுஸ்திரேலியாவை வீழ்த்தி அபார வெற்றியைப் பெற்றது.

இதனிடையே மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெற்றிக்கு முக்கிய காரணகர்த்தாவாக திகழ்ந்த ஷமார் ஜோசப்பின் வாழ்க்கை வரலாற்றை படித்து பாராட்டியுள்ளார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் டி வில்லியர்ஸ்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

“ஷமார் ஜோசப்பின் வாழ்க்கை வரலாற்றை விக்கிபீடியா பக்கத்தில் படியுங்கள். அவரின் பயணத்தை பற்றி படிக்கும்போது எனது கண்களில் கண்ணீர் வந்தது. எளிமையாக சொல்ல வேண்டும் என்றால், அவரின் வாழ்க்கை வரலாறு ஊக்கமளிக்கும்” என்றார். (ஐ)

# உலகக் கிண்ண அணியில் இடம்பிடிப்பதே எனது இலக்கு



மும்பை, பெப். 02

இந்திய அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான தீபக் சாஹர் கடந்த 2018ஆம் ஆண்டு அந்த அணிக்காக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அறிமுகமாகி இதுவரை 13 ஒருநாள் போட்டிகள் மற்றும் 25 ரி - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

கடைசியாக அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ரி-20 தொடரில் விளையாடிய தீபக் சாஹர் தனது தந்தையின் உடல்நிலை காரணமாக அந்த தொடரின் பாதியிலேயே வெளியேறினார். இதனை தொடர்ந்து வந்த தென்னாபிரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தான் என அடுத்தடுத்த தொடர்களை தவறவிட்டார்.

இந்நிலையில், அவர், “எனது தந்தைதான் எனக்கு எல்லாவற்றையும்விட முக்கியம். எனவே, அவருடன் இருக்க வேண்டும் என்பதற்காகவே நான் இந்திய அணியில் இருந்து வெளியேறினேன். எனது தந்தை மருத்துவமனையில் அவசர சிகிச்சையில் இருக்கும்போது வெளிநாடு சென்று விளையாடினால் நான் ஒரு நல்ல மகனே கிடையாது.

எனவே, இந்திய அணியில் இருந்து வெளியேறி 25 நாட்கள் அவருடனே தங்கியிருந்தேன். தற்போது எனது தந்தை நல்ல உடல் நிலையை எட்டியுள்ளார். நான் தற்போது தேசிய கிரிக்கெட் அக்கடமிக்கு சென்று நல்ல பயிற்சியையும் மேற்கொண்டு ரி - 20 உலகக் கிண்ணத் தொடருக்காக தயாராகி உள்ளேன்.

அடுத்து என்னுடைய இலக்கே ரி - 20 உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் இடம் பிடிப்பதுதான். ஏற்கனவே இரண்டு முறை ரி- 20 உலக கோப்பை தொடரில் காயம் காரணமாக வாய்ப்பைப் பெறாத நான் இம்முறை நிச்சயம் அந்த வாய்ப்பை எட்டிப் பிடிப்பேன்” என்றார். (ஐ)

# ஆப்கானுக்கு எதிரான டெஸ்ட்; இலங்கை அணி அறிவிப்பு!

கொழும்பு, பெப். 02

இலங்கை - ஆப்கானிஸ்தான் இடையேயான ஒரே ஒரு டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகிறது. இதற்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அணிக்கு தனஞ்சய டி சில்வா தலைமையிலான இந்த அணியில் வேகப்பந்து வீச்சாளர்களான சாமிக குணசேகர, மிலன் ரத்நாயக்க இடம் பிடித்துள்ளனர். அத்துடன், லஹிரு உதார, கமிந்து மெண்டிஸ் ஆகியோரும் அணியில் உள்ளனர். பதும் நிஷாங்க அணிக்குள் உள்வாங்கப்படவில்லை. டில்ஷான் மதுசங்க, குசல் பெரேராவும் அணியில் இல்லை.

தனஞ்சய டி சில்வா தலைமை தாங்கும் இந்தப் போட்டியில் முன்னாள் தலைவர்களான அஞ்சலோ மத்தியூஸ், திமுத் கருணாரத்ன, தினேஷ் சந்திமாலும் களம் காண்கின்றனர்.

அணி விவரம் - தனஞ்சய டி சில்வா (அணித் தலைவர்), குசல் மெண்டிஸ், திமுத் கருணாரத்ன, நிஷான் மதுஷ்க, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், சதீர சமரவிக்கிரம, ரமேஷ் மெண்டிஸ், அசித பெர்னாண்டோ, விஸ்வ பெர்னாண்டோ, கசூன் ராஜித, கமிந்து மெண்டிஸ், பிரபாத் ஜெயசூர்யா, லஹிரு உதார, மிலன் ரத்நாயக்க (ஐ)



வெ.சந்திரமோகன்

# திருப்புமுனையாகும் பீஹார் அரசியல் களம்!



உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியில் 'டாஸ்' போடுவதற்குச் சற்று முன்பு, ஒரு அணியின் கேப்டன், திடீரென எதிரணியில் சேர்ந்து விளையாட ஆயத்தமானால் எப்படி இருக்கும்? பிஹாரில் நிதீஷ் குமார் நிகழ்த்தியிருக்கும் அரசியல் 'பல்டி' அப்படிப்பட்டதுதான்.

பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கே மீண்டும் திரும்பி, மீண்டும் (!) முதல்வராகியிருக்கிறார். ஆனால், இதில் ஒரு சிறிய வித்தியாசம் இருக்கிறது. 'இண்டியா' கூட்டணியின் 'கேப்டன்'னாக நிதீஷ் நியமிக்கப்படவே இல்லை. நிதீஷ் நிம்மதியிழந்து வெளியேற அது முக்கியக் காரணம். கூடவே பாஜகவின் அஸ்திரங்கள், காங்கிரஸ் - ராஷ்ட்ரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி) மீதான அதிருப்தி என வேறு சில காரணிகளும் உண்டு.

### பின்னணி என்ன

2022 ஆகஸ்ட் மாதம் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து வெளியேறி மகாகட்பந்தன் கூட்டணி சார்பில் மீண்டும் முதல்வரான நிதீஷ் குமார், 2023 ஜூன் மாதத்தில் பாஜகவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை அணிதிரட்டத் தொடங்கினார். பின்னர், 'இண்டியா' என நாமகரணம் சூட்டப்பட்ட அந்தக் கூட்டணிக் கட்சிகளின் மொத்த வாக்குவிகிதம் 38 வீதம் எனப் பேசப்பட்டது.

பாஜகவின் வாக்கு சதவீதம் 37 வீதம் தான். இண்டியா கூட்டணியின் முதல் கூட்டத்தைப் பிஹார் தலைநகர் பாட்னாவில்தான் நிதீஷ் நடத்தினார். ஒருவகையில், அக்கூட்டணியின் மாதிரி வடிவமாக பிஹார் அரசும் - அரசியல் களமும் இருந்தன.

இதற்கிடையே, 2024 மக்களவைத் தேர்தலுக்குப் பின்னர் பிஹார் முதலமைச்சர் பதவி, துணை முதல்வர் தேஜஸ்வி யாதவுக்கு வழங்கப்பட வேண்டும் என ஏற்கெனவே ஒப்பந்தம் செய்திருப்பதால், பதவியை விட்டுக்கொடுக்க மனமில்லாமல் நிதீஷ் பரிதவிப்பில் இருந்தார்.

தவிர, இண்டியா கூட்டணியின் ஒருங்கிணைப்பாளராகத் தான் நியமிக்கப்பட வேண்டும் என்றும் விரும்பினார். கடைசியாக நடந்த இண்டியா கூட்டணிக் காணொளிக் கூட்டத்தில், ஒருங்கிணைப்பாளராக நிதீஷை நியமிக்க சோனியா காந்தி தீர்மானித்திருந்த நிலையில், மம்தா பானர்ஜியின் அபிப்ராயத்துக்காகக் காத்திருக்கலாம் என்று ராகுல் காந்தி கூறியது நிதீஷை அதிருப்திக்கு உள்ளாக்கியது என்கிறார்கள்.

ஒருங்கிணைப்பாளர் பதவி கிடைத்தால் பிரதமர் வேட்பாளராகும் வாய்ப்பு பிரகாசமாகும் என்று நிதீஷ் நினைத்திருந்தார். மல்லிகார்ஜுன கார்கேயை மம்தா பானர்ஜியும், அர்விந்த் கேஜ்ரிவாலும் முன்னிறுத்தியதை அவர் ரசிக்கவில்லை.

சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி பாஜகவுக்கு ஏற்கெனவே நிதீஷ் சவால் விட்டிருந்த நிலையில், பிஹாரில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு (1977இல்) வழங்கிய கர்பூரி தாக்கூருக்குச் சமீபத்தில் பாரத ரத்னா விருதை பாஜக அறிவித்தது. அதை வரவேற்றதுடன் மோடியின் புகழ் பாடவும் தொடங்கினார் நிதீஷ். ஆர்ஜேடி ஆத்திரமடைந்தது. இண்டியா கூட்டணியும் கலகலத்தது. காட்சி மாறியது.

### காங்கிரஸுக்குச் சவால்கள்

காங்கிரஸின் பிடிவாதமான அணுகுமுறையால் மேலும் பல சிக்கல்கள் விளைந்தன. கூட்டணிக்கு ஒருங்கிணைப்பாளர் தேர்வுசெய்யப்படவில்லை. தொகுதிப் பங்கீடு குறித்து தீவிர ஆலோசனை இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. ஏற்கெனவே மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களின் தேர்தல்களில் பாஜகவிடம் காங்கிரஸ் தோல்வியடைந்ததற்கு, கூட்டணிக் கட்சிகளுக்கு இடம் கொடுக்காமல் தனியாகக் களம் கண்டது முக்கியக் காரணமாக முன்வைக்கப்படுகிறது.

படுதோல்விக்குப் பிறகாவது தொகுதிப் பங்கீடு விஷயத்தில் துரிதம் காட்டவோ, இலகுவாக நடந்துகொள்ளவோ காங்கிரஸ் முயலவில்லை என்கிறார்கள். விளைவு, ராகுல் காந்தியின் 'நியாய யாத்திரை' மேற்கு வங்கத்துக்குள் நுழைவதற்கு முன்னர், மம்தா பானர்ஜி 42 தொகுதிகளிலும் திரிணமூல் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் என்று அதிரடியாக அறிவித்தார். பிஹாரில் நுழைவதற்கு முன்னர் நிதீஷ் தனது பழைய அணிக்குத் தாவிவிட்டார்.

காங்கிரஸின் செல்வாக்குக் கணிசமாகச் சரிந்துவிட்ட உத்தரப் பிரதேசத்தில், அக்கட்சிக்கு 11 இடங்களை வழங்குவதாக சமாஜ்வாதி கட்சி கூறுகிறது. ஆனால், குறைந்தபட்சம் 15 இடங்களாவது வேண்டும் என்று காங்கிரஸ் பிடிவாதம் காட்டுகிறது. பஞ்சாப் மாநிலக் காங்கிரஸ் தலைவர்கள் ஆம் ஆத்மி கட்சியுடன் கூட்டணி வைக்கக் கூடாது என்று போர்க் கொடி தூக்கியிருக்கிறார்கள். குஜராத், ஹரியாணா மாநிலங்களில் தங்களுக்குக் கணிசமான இடங்களைக் காங்கிரஸ் தந்தால்தான் பஞ்சாப், டெல்லியில் அக்கட்சிக்குத் தொகுதிகளை ஒதுக்க முடியும் என்கிறது ஆம் ஆத்மி கட்சி. இப்படி நிறைய சிக்கல்கள்!

### பலன் பெறும் பாஜக

மறுபுறம் குடியுரிமைத் திருத்தச் சட்டம், பொது சிவில் சட்டம், லாலுபிரசாத் யாதவ் - ஹேமந்த் சோரன் போன்ற தலைவர்கள் மீது அமலாக்கத் துறை நடவடிக்கைகள் எனஅடுத்தடுத்து அஸ்திரங்களை ஏவி எதிர்க்கட்சிகளைத் தவிக்கவிடுகிறது பாஜக. இவ்வளவு களேபரங்களுக்கு மத்தியிலும் 23 மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களுக்குத் தேர்தல் பொறுப்பாளர்களை அக்கட்சி நியமித்துவிட்டது.

இந்தி பேசும் மாநிலங்களான உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், உத்தராகண்ட், ஹரியாணா வரிசையில் மிச்சமிருந்த பிஹாரும் இப்போது பாஜகவின் கைக்குள் சென்றுவிட்டது. ஏற்கெனவே ராமர் கோயில் திறப்புவிழா மூலம் சாதிகளைக் கடந்து இந்து மதத்தினரைக் கவர்வதில் வெற்றி பெற்றிருக்கும் பாஜக, சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்திய நிதீஷ் இப்போது தங்கள் பக்கம் இருப்பதால் ஓபிசி அரசியலில் எதிர்க்கட்சிகளுக்குப் பெரிய சவாலை உருவாக்கியிருக்கிறது. ஆக, 'கமண்டல்', 'மண்டல்' என இரண்டு அஸ்திரங்கள் பாஜக வசம் இருக்கின்றன.

ஐக்கிய ஜனதா தளத்துக்கு மாநிலங்களவையில் ஐந்து உறுப்பினர்கள் இருக்கும் நிலையில், நிதீஷின் அணி மாற்றத்தால் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 114 உறுப்பினர்கள் என மாநிலங்களவையில் வலிமை கூடுகிறது. அது மட்டுமல்ல, பெருந்தலை நிதீஷே பாஜக பக்கம் சென்றுவிட்ட நிலையில், வேறு சில கட்சிகளும் பாஜக பக்கம் ஈர்க்கப்பட சாத்தியம் அதிகம்.

### நிதீஷின் எதிர்காலம்

அடிக்கடி அணி மாறியதால் அரசியல் வட்டாரத்தில் கேலிப்பொருளாகியிருக்கிறார் நிதீஷ். மேலும், பாஜக அப்படியொன்றும் அவரை நிம்மதியாக வைத்திருக்காது என்றே சொல்லலாம். 2020 தேர்தலில் லோக் ஜனசக்திக் கட்சித் தலைவர் சிராக் பாஸ்வானின் துணையுடன் ஓர் அரசியல் சதுரங்கம் ஆடிய பாஜக, அதன் மூலம் நிதீஷின் ஐக்கிய ஜனதா கட்சியின் வெற்றி விகிதத்தை வெகுவாகக் குறைத்தது.

அவரை மீண்டும் முதல்வராக்கினாலும், அவரால் வெறுக்கப்படும் தார்கிஷோர் பிரசாத், ரேணு தேவி ஆகியோரைத் துணை முதல்வர்களாக்கி அழுத்தம் கொடுத்தது. இந்த முறையும், நிதீஷைச் சகட்டுமேனிக்கும் விமர்சித்துவந்த சாம்ராட் சௌத்ரி, விஜய் குமார் சின்ஹா ஆகிய இருவரையும் துணை முதல்வர்களாக்கியிருக்கிறது பாஜக.

தவிர, நிதீஷின் வரவால் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள லோக் ஜனசக்தி கட்சி, ஹிந்துஸ்தான் அவாம் மோர்ச்சா போன்ற சிறிய கட்சிகள் கலக்கத்தில் உள்ளன. தொகுதிப் பங்கீட்டில் சிக்கல் வரலாம்.

### இண்டியா கூட்டணியின் சாதகங்கள்

காங்கிரஸால் அதிருப்தி அடைந்திருந்தாலும் கூட்டணியை விட்டு வெளியேறாத மம்தா பானர்ஜி, இப்படியெல்லாம் நிதீஷ்குமார் செய்யக்கூடும் என முன்பே தெரிந்திருந்ததால்தான் அவரை ஒருங்கிணைப்பாளராக முன்னிறுத்தவில்லை என்று சுட்டிக்காட்டுகிறார். நிதீஷ் வெளியேறியதால், பிஹாரில் இனி காங்கிரஸ் - ஆர்ஜேடி - இடதுசாரிகள் இடையே தொகுதிப் பங்கீடு எளிதாகும்.

நிதீஷ் போல் அல்லாது, நம்பகத்துக்குரியவர் என்பதால் மல்லிகார்ஜுன கார்கேயின் பங்கு இனி முதன்மையாக இருக்கும் என நம்பப்படுகிறது. நிதீஷைச் சீண்டும் வகையில், சாதிவாரிக் கணக்கெடுப்பு, 4 லட்சம் பணி நியமனங்கள், சுகாதாரத் துறை மேம்பாடு என மகாகட்பந்தன் ஆட்சியின் முக்கியச் சாதனைகளுக்குச் சொந்தம் கொண்டாடத் தொடங்கிவிட்டது ஆர்ஜேடி. தேர்தல் களத்தில் இதைச் சொல்லி ஆதரவு திரட்டவும் அக்கட்சி திட்டமிடுகிறது. மொத்தத்தில் மக்களவைத் தேர்தலில் பிஹார் அரசியல் களம்தான் திருப்புமுனையாகியிருக்கிறது.

# ராஜீவ் வழக்கு: சாந்தன் ஓரிரு நாட்களில் இலங்கை திரும்ப வாய்ப்பு!

## நளினி, முருகன், பயஸ் எப்போது?

**ரஞ்சன் அருண் பிரசாத்**

இந்திய பிரதமர் ராஜிவ் காந்தியின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு, விடுதலையாகியுள்ள இலங்கையர்களை மீண்டும் தாய் நாட்டிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் திருப்பெரும்புதூர் பகுதியில் 1991ம் ஆண்டு மே மாதம் 21ம் தேதி தற்கொலை குண்டுத் தாக்குதல் ஒன்றில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டிருந்தார்.

இந்த கொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் இந்தியர்கள் உட்பட இலங்கையர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இலங்கையர்களான சாந்தன், முருகன், ராபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு 32 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்திருந்தனர்.

இந்த நிலையில், ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டிருந்த பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டதை அடுத்து, நளினி, சாந்தன், முருகன், ராபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரும் விடுதலை செய்யப்பட்டனர்.

சாந்தன், முருகன், ராபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் தேதி விடுதலை செய்யப்பட்ட போதிலும், அவர்கள் இன்று வரை தாயகம் திரும்பவில்லை.

யாழ்ப்பாணத்தில் வசித்துவரும் சாந்தனின் தாயார், தனது மகனை நாட்டிற்கு அழைத்து வரும்படி, பல்வேறு தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றார்.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் இருந்து நளினி, முருகன், சாந்தன், ராபர்ட் பயஸ் ஆகிய நான்கு இலங்கையர்களையும் அழைத்து வருவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கை தமிழரசு கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் பிபிசி தமிழுக்கு தெரிவித்தார்.

**தமிழ்நாடு முதல்வருக்கு அவசர கடிதம்**

இந்திய உச்ச நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ள சாந்தன், முருகன், ராபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரை விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை தமிழரசு கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழக முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

சாந்தனின் தாயாரால் தனக்கு வழங்கப்பட்ட கடிதத்தை மேற்கோள் காட்டி இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

‘32 ஆண்டுகால சிறைத்தண்டனையின் பின்னர் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு ஒருவருடம் கடந்துள்ள நிலையில், அவ்வழக்கிலிருந்து விடுதலையான இலங்கைப் பிரஜைகளான சாந்தன், முருகன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் இலங்கைக்கு வரவழைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட எந்த முயற்சிகளும் பலனளிக்கவில்லை. இதனால், இன்று



வரை அவர்கள் நால்வரும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை தாங்கள் கரிசனையோடு அணுகுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

தனது இளமைக்காலம் முழுவதையும் சிறையில் கழித்து, முதுமைக் காலத்தில் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு என்பவற்றால் மிகக் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ள சாந்தன், தற்போது சென்னை மருத்துவ மனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

கடந்த 33 ஆண் டுகளாகத் தனது மகனைக் காணாது பரிதவித்திருக்கும் சாந்தனின் தாயார், 77 வயது நிரம்பிய தனது முதுமை நிலையில் ஒருதடவையாவது தனது மகனை நேரில் பார்க்க வேண்டும் எனவும், அவரை இலங்கைக்கு வரவழைக்க ஆவன செய்யுமாறும் மிக உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.



தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்து ஈழத்தமிழர்கள் விடயத்தில் அதீத கரிசனை கொண்டிருக்கும் தாங்கள், இவ் விடயத்தை மனிதாபிமான அடிப் படையில் அணுகி நோய்வாய்ப்பட்டிருக்கும் சாந்த னின் உடல்நிலை கருதியும், அவரது குடும் பத்தினரின் உணர்வு நிலைப்பட்ட எதிர் பார்ப்பைக் கருத்தில் கொண்டும் சாந்தன் உள்ளிட்ட நால்வரையும் இலங்கைக்கு அனுப்பிவைக்க ஆவனசெய்யுமாறு தங்க ளைக் தயவுடன் கேட் டுக்கொள்கின்றேன்” என சிவஞானம் சிறிதரனினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**டக்ளஸ் தேவானந்தாவுடன் சாந்தன் குடும்பத்தினர் சந்திப்பு**

சாந்தனின் தாயார் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர் கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, தனது மகனின் விடுதலை தொடர்பில் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடல்களை நடாத்திய பின்னர் விரைவில் பதிலொன்றை பெற்றுத் தருவதாக சாந்தனின் குடும்பத் தினரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித் துள்ளார்.

விடுதலை செய்யப்பட்ட சாந்தன் சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரின் தாய் மற்றும் சகோதர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை செவ்வாயன்று (30) சந்தித்து, சாந்தனை நாட்டிற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கேட்டுக் கொண்டனர்.

இதையடுத்தே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த பதிலை வழங்கியுள்ளார்.

**சாந்தன் ஓரிரு நாட்களில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவாரா?**

இலங்கை பாதுகாப்பு அமைச்சகத்தின் அனுமதி கிடைத்தால், சாந்தனை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய அதிகாரிகள், தன்னிடம் கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவிக்கின்றார்.

அத்துடன், சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

“தமிழ்நாட்டில் இருந்து சாந்தனை இலங்கை அழைத்து வருவதற்கு வெளிவிவகார அமைச்சகத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள இந்தியாவுக்கான இலங்கை துணைத் தூதரான வெங்கட் அவர்களோடு பேசப்பட்டுள்ளது. அநேகமாக இரண்டு மூன்று நாட்களுக்குள் அந்த விடயம் சரிவரும். அத்தோடு இந்திய அதிகாரிகளால் சில ஆவணங்கள் கேட்கப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் போது அந்த விடயம் சாத்தியமாகும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.


இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பி னர் சிவஞானம் சிறிதரன், சென்னையிலுள்ள இலங்கை துணை தூதுவருடன் தொலை பேசி வழியே கலந்துரையாடல்களை நடாத் தியுள்ளார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சகத்தின் அனுமதி கிடைக்கப் பெறும் வரை காத்தி ருப்பதாகவும், அனுமதி கிடைத்தவுடன் சாந்தனை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்ப டும் எனவும் சென்னையிலுள்ள துணை தூதர் பதிலளித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குறிப்பிட்டுள்ளார்.

**பாதுகாப்பு அமைச்சகத்தின் பதில்**

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பதிலொன்றை விரைவில் வழங்குவதாக பாதுகாப்பு அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர், தெரிவித்தார்.

“அவ்வாறான கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளதாக இதுவரை எனக்கு தெரியவில்லை. இந்த விடயம் குறித்து ஆராய்ந்து விரைவில் பதிலொன்றை வழங்குவேன்” என பாதுகாப்பு அமைச்சகத்தின் உயர் அதிகாரி குறிப்பிட்டார். ●



# இஸ்ரேலின் இனப்படுகொலை முற்றுப்புள்ளிக்கான தொடக்கம்

காசாவில் இனப்படுகொலை செயல்பாடுகளைத் தடுக்க இஸ்ரேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் பிறப்பித்திருக்கும் உத்தரவு மிகுந்த நம்பிக்கையளிக்கிறது. போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்கப்படவில்லை என்றாலும், காசா மக்கள் மீதான இனப்படுகொலைச் செயல்பாட்டைத் தடுத்தாக வேண்டும் என்ற கட்டாயத்துக்கு இஸ்ரேல் தள்ளப்பட்டிருப்பது, இன்றைய சூழலில் மிகவும் முக்கியமானது.

பல பத்தாண்டுகளாக, இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினை தொடர்ந்து வரும் நிலையில், 2023 அக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தொடர் ஏவுகணைத் தாக்குதல் தற்போதைய பிரச்சினைக்கு முக்கியக் காரணமானது. இதில் இஸ்ரேலைச் சேர்ந்த 1,139 பேர் பலியாகியிருக்கிறார்கள்.

ஆனால், இதற்குப் பழிவாங்கும் விதத்தில் 'முழுமையான வெற்றி கிடைக்கும் வரை போர் தொடரும்' என்ற சூளுரையுடன் காசா மீது இஸ்ரேல் மேற்கொண்ட தொடர் தாக்குதலில், இதுவரை 26,083 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் 64,487 பேர் காயமடைந்திருக்கிறார்கள். அடிப்படை வசதிகளற்ற முகாம்களில் வாடும் குழந்தைகள் எந்த நேரத்திலும் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்கிற அச்சத்துடன் வாழ்கின்றனர்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலை எந்தவிதத்திலும் நியாயப்படுத்திவிட முடியாது. ஆனால், அதைவிடவும் படுமோசமான தாக்குதல்களை நடத்தி, பல மடங்கு உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியிருக்கும் இஸ்ரேலின் நடவடிக்கை கடுமையான கண்டனத்துக்குரியது. இது குறித்து சர்வதேச அளவில் எழுந்த எதிர்ப்புகளை இஸ்ரேல் தனக்கே உரிய பாணியில் கையாண்டதுடன், பாதிக்கப்பட்ட தரப்பாகவே தன்னை முன்னிறுத்திக்கொண்டு, பாலஸ்தீன மக்களைக் கொன்றழிக்கும் தாக்குதலைத் தொடர்கிறது.

இந்நிலையில், இந்த விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்று, குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றிருக்கிறது தென் ஆப்ரிக்கா. இஸ்ரேலுக்கு எதிராகத் தென் ஆப்ரிக்கா முன்வைத்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், காசா மீது இஸ்ரேல் நிகழ்த்தியவற்றில் குறைந்தபட்சம் சில செயல்பாடுகள் இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுப்பது, தண்டிப்பது தொடர்பான உடன்படிக்கையின் ஷரத்துக்களுக்கு உட்பட்டவை என சர்வதேச நீதிமன்றம் கூறியிருக்கிறது. மருத்துவமனைகள், பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகள், மக்கள் அடர்த்தி அதிகம் உள்ள பகுதிகளில் இஸ்ரேல் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதாக நீதிபதிகள் உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

17 நீதிபதிகள் கொண்ட அமர்வு மேற்கொண்ட இந்த விசாரணையில், 15 - 2 எனும் பெரும்பான்மையுடன் காசா மக்கள் மீதான இனப்படுகொலையைத் தடுப்பதற்கான ஒருமித்த கருத்து எட்டப்பட்டிருக்கிறது. காசா மக்களுக்கு உடனடியாக மனிதாபிமான உதவிகளையும், அடிப்படைச் சேவைகளையும் வழங்குவதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் இஸ்ரேலுக்கு சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

இதற்கிடையே, இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலில், பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிவாரண அமைப்பைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றதாக இஸ்ரேல் முன்வைக்கும் குற்றச்சாட்டு அதிர்ச்சியூட்டுகிறது. அந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் அந்த அமைப்புக்குச் சர்வதேச நிதி உதவி வழங்கப்படுவதை அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தடுத்து நிறுத்தியிருப்பது துரதிர்ஷ்டவசமானது.

காசாவின் மீது இஸ்ரேல் நிகழ்த்திவரும் இனப்படுகொலைகளைத் தடுக்க சர்வதேச அளவில் முதல் குரல் எழுந்திருக்கிறது. இது மேலும் வலுவடைந்து, இஸ்ரேலின் எதேச்சதிகார நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என நம்புவோம்!

## சிறுவன் மர்ம மரணம்; பெண்ணுக்கு மறியல்

அம்பாறை, பெப். 02

நன்னடத்தை பாடசாலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி வரை மறுவிசாரணைக்காக ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தில் கல்முனை தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் நேற்று முன் தினம் புதன்கிழமை மீண்டும் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோதே மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணி ஆகியோரின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு 28 வயதுடைய குறித்த பாடசாலையின் மேற்பார்வையாளரான பிறின்ஸி புலேந்திரன் என்பவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## இலங்கையில் முதற் தடவையாக பச்சை நிற ஐஸ் போதைப்பொருள்

கொழும்பு, பெப். 02

அங்குனுகொலபெலஸ்ஸ சூரியாரா பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனமல்வில தலைமையக பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவொன்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் பச்சை நிறத்தில் காணப்படுவதுடன், இலங்கையில் முதன்முறையாக இந்த பச்சை ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் அதே பகுதியைச் சேர்ந்த 63 வயதுடையவர் எனவும் சந்தேகநபர் வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

(அ)

